सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# வரவு - செலவுத் திட்ட உரை

# 2017 - 2018

திரு **வே. நாராயணசாமி**

மாண்புமிகு முதலமைச்சர்




**25 மே, 2017**

# வரவு - செலவுத் திட்ட உரை

# 2017 - 2018

**அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற்கு இயல்பு. -குறள்**

மனவுறுதி, கொடை, அறிவு, ஊக்கம் எனப்படும் நான்கு பண்புகளும் சிறிதும் குறையாதிருத்தலே அரசர்க்கு இயல்பாகும்.

***மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே !***

**நா**ன் 2017-18ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க எழுந்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு 2017-18ஆம் ஆண்டுக்கான ஆண்டு நிதி விவரவுரை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்க விவரக் குறிப்பு ஆகியவை வழங்கப்பட உள்ளன. சென்ற ஆண்டு இந்த மேன்மைமிக்க அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள், புதுச்சேரி மாநில மக்களின் பேராதரவோடும் மற்றும் அன்புத் தலைவி அன்னை சோனியா காந்தி, அருமைத் தலைவர் திரு ராகுல்காந்தி, முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் மற்றும் திரு ஸ்டாலின் இவர்களின் பேராதரவோடும் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம், புதுச்சேரி மாநிலத்தை வளர்ச்சிப்பாதைக்கு செலுத்தியுள்ளது. என்னுடைய வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பெரும்பாலான திட்டங்களை நிறைவேற்ற

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. புதுச்சேரியின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு, தொடர்ந்து எடுக்கும்.

**2.** 2017-18ஆம் ஆண்டுக்கான மொத்த வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ₹ 6,945 கோடி ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். அதில் திட்டம்-சாராத (Non-Plan) தொகை ₹ 4,445 கோடியும், திட்டம்-சார்ந்த தொகை ₹ 2,500 கோடியும் உள்ளடங்கும். இவ்வாட்சிப்பரப்பின் சொந்த நிதி ஆதாரத்திலிருந்து வரும் பங்களிப்பு ₹ 4,022 கோடி (57.9 விழுக்காடு) எனவும், இந்திய அரசிடமிருந்து வரும் மத்திய நிதி உதவி ₹ 1,411 கோடி (20.3 விழுக்காடு) எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய சாலை நிதியையும் (CRF) சேர்த்து மத்திய ஊக்குவிப்புத் திட்டத்திற்கு (CSS) எதிர்பார்க்கப்படும் நிதி உதவியானது, ₹ 361 கோடி (5.2 விழுக்காடு) ஆகும். எஞ்சியுள்ள தொகையான ₹ 1,151 கோடி (16.5 விழுக்காடு) வெளிச்சந்தை மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும்.

**3.** மொத்த ஒதுக்கீடான ₹ 6,945 கோடியில் ஏறக்குறைய 60 விழுக்காடு உறுதி செய்யப்பட்ட செலவினங்களுக்காக அதாவது, சம்பளங்களுக்காக ₹ 1,650.40 கோடியும் (23.76 விழுக்காடு), ஓய்வூதியத்திற்காக ₹ 663.27 கோடியும் (9.55 விழுக்காடு) கடன் சேவைக்காக அதாவது, வட்டி மற்றும்

கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக ₹ 1,112.88 கோடி (16.02 விழுக்காடு) மின்சாரம் கொள்முதல் செய்வதற்காக ₹ 1,012.19 கோடி (14.57 விழுக்காடு) ஒதுக்கப்பட உள்ளது.

**4.** 2016-17ஆம் ஆண்டு ₹ 6,144 கோடி செலவிடப்பட்டது. அது திருத்திய மதிப்பீட்டுத் தொகையான ₹ 6,550 கோடியில் இவ்வாட்சிப்பரப்பின் வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவுக்கான செலவு ஆகும். என்னுடைய அரசுக்கு நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், ஏழாவது ஊதியக்குழுவின் சம்பளம் மற்றும் ஓய்வூதியங்கள் மேலான பரிந்துரைகளைச் செயல்படுத்தியது. எனது அரசின் மிகுந்த முயற்சிகளுக்கிடையிலும் திட்டம்-சாரா இடைவெளி மானியம் (Non-Plan Gap-grant) ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைகள் நிறைவேற்றம், மத்திய ஊக்க ஆதரவுத் திட்டம் ஆகிய திட்டங்களுக்காக கேட்டுக்கொண்ட கூடுதல் மானியம் இன்னும் பெறப்படவில்லை. ஆயினும், எனது அரசு செலவினங்களைச் சீரமைத்ததன் வாயிலாக ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளையும் மற்றும் பிற நலத்திட்டங்களையும், செயல்படுத்தியதற்கான கூடுதல் செலவினத்தை எதிர்கொண்டது. 2016-17ஆம் ஆண்டு, பணப்பரிமாற்றம், கலால் மற்றும் பத்திரப்பதிவுகள் மீதான நீதிமன்ற உத்தரவுகள் காரணமாக, நிதி சம்பந்தமான வகையில் நிதி ஆதாரங்களை பெருக்குவதில் சாதகமான நிலையில் இல்லை. இருந்தபோதிலும், மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி

பெறப்படாதபோதிலும் எனது அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இவ்வாட்சிப்பரப்பின் வரவு-செலவுத் திட்டங்கள் திருப்திகரமான வகையில் நிறைவேற்ற முடிந்தது.

**5.** 2007-08ஆம் ஆண்டில் பெறப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக இவ்வாட்சிப்பரப்பு நடப்பு ஆண்டில் ₹ 347 கோடி தொகையைக் கூடுதலாகச் செலுத்தவேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். பொது கணக்கு ஆரம்பிப்பதற்கு முந்தைய காலங்களில் பெறப்பட்ட கடன்கள் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும், கடந்தகால திட்டம்-சாரா செலவினங்களின் பற்றாக்குறையைச் சரிசெய்வதற்காகக் கூடுதல் மானியம் அளிக்கவேண்டும் என்றும் தொடர்ந்து மத்திய அரசிடம் வைத்த கோரிக்கைகள் இதுவரை எதிர்பார்த்த பலனேதும் அளிக்கவில்லை. இருந்தபோதிலும், எனது அரசு மத்திய அரசிடம் இந்த விஷயத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

**வேளாண்மை**

**6.** வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு உணவு வழங்குவதில் நமது நாட்டைப் பெருமளவு தன்னிறைவு அடைந்த நாடாக ஆக்குவதற்கு நம்நாட்டு விவசாயிகள் சவாலை எதிர்கொண்டுள்ளனர். விவசாயத்தை நீடித்து நிற்கும் பயனளிக்கின்ற தொழிலாக ஆக்குவதற்கு எனது அரசு முன்னுரிமை அளித்துவருகிறது. விவசாயச் செலவினங்களுக்கு

உதவி அளிக்கும் வகையில் எனது அரசு இவ்வாட்சிப்பரப்பில் பாசன நோக்கங்களுக்காக விவசாயிகளால் பயன்படுத்தப்படும் மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு (Motor Pump Sets) இந்த ஆண்டிலிருந்து இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**7.** தேசிய கொள்கைக்கு இணங்க வேளாண் உற்பத்திப்பொருள் விற்பனைக்குழுச் சட்டத்தைப் (APMC Act) பொருத்தமாகத் திருத்தம் செய்து மின்-தேசிய வேளாண் விற்பனை (e-NAM) மூலம் மின்-பணித்தள (e-Platform) முறைக்கு மாற்றி விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருள்களுக்கு ஆதாயமிக்க விலையைப் பெறுவதை உறுதிசெய்யும் பொருட்டு, இவ்வாட்சிப்பரப்பின் விற்பனை உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும். விற்பனையை, மின்-தேசிய வேளாண் விற்பனைப் பணித்தளத்துடன் முழுமையாக ஒருங்கிணைப்பதற்கு ஏதுவான உள்கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்காக மத்திய அரசிடமிருந்து விற்பனைக்குழு ஒன்றுக்கு ₹ 75 இலட்சம் அளவுக்கு நிதி உதவி பெறப்படும்.

**8.** ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நவீன வசதிகளை உருவாக்கும் பொருட்டு, விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல் தானியங்களின் ஈரப்பதத்தை உகந்த அளவில் குறைத்து அவற்றின் சந்தை மதிப்பை உயர்த்திக்கொள்வதற்காக புதுச்சேரி மற்றும்

காரைக்காலில் சமுதாய தானிய உலர்த்திகள் (Community Grain Dryers) வழங்கப்படும். விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களைத் துல்லியமாக எடைபோடுவதற்காக அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் மின்-தராசு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மற்றும் உரிமம் பெற்ற வணிகர்கள் பயனடையும் பொருட்டு, புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் ஆகிய அனைத்து பகுதிகளிலும் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் 50 மெட்ரிக் டன் திறன்கொண்ட மின்-எடைமேடைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**9.** எனது அரசு விவசாயிகளுக்கு எதிர்பாராத நிகழ்வுகளால் பயிர்களுக்கு ஏற்படும் இழப்புகளை ஈடுகட்டும் பொருட்டு, “பிரதம மந்திரி ஃபசல் பீமா யோஜனா” எனும் காப்பீடுத் திட்டத்தை செயல்படுத்துகிறது. விவசாயிகளின் சுமையை ஏற்றுக் கொள்வதற்காக காப்பீடுத் திட்டத்தில் பங்கு தவணைத் தொகைக்கான செலவுகள் முழுவதையும் எனது அரசு ஏற்றுக்கொள்கிறது. 2016-17ஆம் ஆண்டின்போது 8,881 விவசாயிகளால் சாகுபடி செய்யப்பட்ட 7,362 ஹெக்டர் நெற்பயிர் ₹ 31.08 கோடிக்கு பயிர்க்காப்பீடு செய்யப்பட்டது மற்றும் மாநில பங்களிப்பாக ₹ 1.64 கோடி தொகை இந்த அரசால் தேசிய விவசாய காப்பீட்டு நிறுவனங்களுக்கு சம்பா பயிர்களுக்காக

அளிப்பதற்கு செலுத்தப்பட்டுள்ளது. எனது அரசு, நடப்பு நிதி ஆண்டில் 12,500 ஹெக்டர் சம்பா மற்றும் நவரை பயிர்களை இயற்கை பேரிடர்களில் ஏற்படும் நட்டத்திலிருந்து விவசாயிகளை பாதுகாப்பதற்கு பயிர்காப்பீட்டுத் தவணைத் தொகை முழுவதையும் அளிக்க உத்தேசித்துள்ளது. விவசாயிகளின் பங்குத்தொகை தவணை முழுவதையும் அரசே செலுத்தும். விவசாயத்தை இயந்திரமயமாக்குதலுக்கு மிகுந்த வரவேற்பு உள்ளதை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 10 பயனாளிகளுக்கு சிறு டிராக்டர் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கான நிதி உதவியை வழங்க எனது அரசு, உத்தேசித்துள்ளது.

**10.** மேலும், "பிரதம மந்திரி கிரிஷி சிஞ்சாய் யோஜனா" (PMKSY) திட்டத்தின்கீழ், புதுச்சேரிப் பகுதியில் பொதுப்பணித் துறை மூலம் ₹ 972.92 கோடியும், காரைக்காலில் ₹ 1,195.57 கோடியும், ஏனாம் பகுதியில் ₹ 85.66 கோடியும், மாகி பகுதியில் ₹ 23.16 கோடியும் நீர் ஆதார கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையின் மூலம் விவசாய நிலங்களுக்கு பாசன வசதியை மேம்படுத்தவும், பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவதற்கு, சொட்டு நீர் பாசனம் முதலிய திட்டங்களை செயல்படுத்த புதுச்சேரியில் ₹ 9.22 கோடியும், காரைக்காலில் ₹ 15.70 கோடியும், ஏனாம் பகுதியில் ₹ 2 கோடியும்,

மாகி பகுதியில் ₹ 63 இலட்சமும், செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கொம்யூன் பஞ்சாயத்து மூலம் காரைக்கால் மற்றும் புதுச்சேரியில் ₹ 174.33 கோடியும், ஊரக மேம்பாட்டு நிறுவனம் மூலம் ₹ 33 கோடியும் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் வயல்களில் பாசன நீரை சிக்கனம் செய்வதற்காக, நிலத்தடி நீர் பாசன குழாய் அமைக்கும் பொருட்டு, தற்பொழுது நடைமுறையில் உள்ள மானியம், பொதுப்பிரிவு விவசாயிகளுக்கு 50 விழுக்காடும், அட்டவணை இன விவசாயிகளுக்கு 75 விழுக்காடும் மானியமாக ₹ 30,000க்கு மிகாமல் வழங்கப்படுகிறது. இந்த மானியத் தொகை இந்த ஆண்டு (2017-18) முதல் ₹ 1 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 15 பொதுப்பிரிவு விவசாயிகள் பயன்பெறுவர். இதற்காக அரசு கூடுதலாக ₹ 10 இலட்சம் செலவிடும்.

**11.** இந்த அரசு புதுச்சேரி மாநிலத்தில் இயற்கை விவசாயத்தை விவசாயிகளுக்கு ஊக்குவிப்பதற்காக நாட்டு ரக பசுமாடுகளை வழங்க உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பொதுப்பிரிவு விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் 10 நாட்டுரக பசுமாடுகளும், அட்டவணை இன விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் 5 பசுமாடுகளும், நபர் ஒருவருக்கு ₹ 20,000க்கு மிகாமல் வழங்கப்படும். இதன் மூலம் புதுச்சேரி மாநிலத்தில் இயற்கை விவசாயத்தை கடைப்பிடிக்கும் விவசாயிகள் இயற்கை உரங்கள், பஞ்சகாவியா, பூச்சி விரட்டி போன்ற இயற்கை

இடுப்பொருட்களை தாங்களே உற்பத்தி செய்து பயன்படுத்த முடியும். இத்திட்டத்திற்கு புதுச்சேரி அரசு ₹ 3,50,000 தொகை ஒதுக்கியுள்ளது.

## கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலன்

**12.** கால்நடை பராமரிப்பானது, கிராமப்புற மக்கள் தொகையின் மூன்றில் இரண்டு பகுதிக்கும் மேலான மக்களின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையான இந்திய வேளாண்மையின் ஒருங்கிணைந்த அங்கமாகும். எனது அரசு, கால்நடை வளத்தைப் பாதுகாப்பதற்கும், உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும், அதன்மூலமான தொழில்முனைவை உருவாக்குவதற்கும், கால்நடை மற்றும் கோழி வளர்ப்பையும் அவற்றின் உற்பத்தியையும் பெருக்கும் பொருட்டு, தனிக்கவனம் செலுத்தும். பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்திக்கு முறையே 48,500 மெட்ரிக் டன், 113.60 இலட்சம் மற்றும் 14,615 மெட்ரிக் டன் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் கால்நடை பராமரிப்பு அதிகமாக உள்ள காரணத்தால் புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வீடுகளுக்கு மோட்டார் சைக்கிள் மூலம் சென்று கால்நடை இனப்பெருக்க மற்றும் கால்நடைச் சுகாதார சேவைகளை வழங்குவதற்காக இந்த நிதி ஆண்டின்போது நடமாடும் கால்நடை பராமரிப்புச் சேவைகள் அளிக்கப்படும்.

இவ்வாட்சிப்பரப்பின் கால்நடை வளத்தை மதிப்பீடு செய்யும் பொருட்டு, மத்திய அரசின் நிதி உதவியுடன் 16-7-2017 முதல் 15-10-2017 வரை 20வது ஐந்தாண்டு கால்நடை கணக்கெடுப்பு நடத்தப்படும். கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் பால் உற்பத்தியை பெருக்கவும் 1,000 கறவை மாடுகள் 75 விழுக்காடு மானியத்தில் வாங்க விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.

**13.** தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரியத்தால் (NDDB) உருவாக்கப்பட்ட மென்பொருளைக் (Software) கொண்டு கால்நடை உற்பத்தித்திறன் மற்றும் சுகாதாரத்திற்கான தகவல் வலையின் (Information Network for Animal Productivity and Health) மூலம் கால்நடைகள் மற்றும் இளம் கன்றுகளின் பால் உற்பத்தி மற்றும் சுகாதார நிலையைக் கண்காணிப்பதற்காக இனப்பெருக்கம் செய்யத்தக்க அனைத்து கால்நடைகள், கறவை மாடுகள் மற்றும் இளம் கன்றுகளுக்கும், 12 இலக்கம் கொண்ட தனித்திற அடையாள எண் (UIB) அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கால்நடை தீவன உற்பத்தியை பெருமளவு உயர்த்தும் பொருட்டு, வேளாண் துறையிலிருந்து வேளாண் அலுவலர்களை அயல்பணி மாற்றல் மூலம் கொண்டுவந்து கால்நடை தீவன மேம்பாட்டுச் சிறகம் மறுஉருவாக்கம் செய்யப்படும். மேலும், தேவைப்படும் விவசாயிகளுக்கு மானிய விலையில் கால்நடை தீவன விதைகள்,

உரங்கள், கருவிகள் முதலியவை வழங்கப்படும். வட்டாரப் பணித்தள வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவமனை தலைமையகத்திலேயே அனைத்து கால்நடை சுகாதார சேவைகளையும் அளிக்கும் பொருட்டு, புதுச்சேரியில் கால்நடை மருத்துவமனை ₹ 25 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**14.** மீன்வளம் வளர்ந்துவரும் ஒரு துறையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. புதுச்சேரி, கடற்கரையைக் கொண்டுள்ள மாநிலமாக இருக்கிறது என்பதால், மீனவர்களின் வருமானத்தை உயர்த்துவதற்காக மீன்வளத்துறையின் உள்கட்டமைப்பைப் பலப்படுத்துவது அவசியமாகும். 2016-17ஆம் ஆண்டின்போது கடல்சார் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்தியானது முறையே 45,927 மெட்ரிக் டன் மற்றும் 4,325 மெட்ரிக் டன் ஆகும். அதேபோன்று மொத்த இறால் உற்பத்தியானது 4,273 டன்னை எட்டியுள்ளது.

**15.** மீன் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு எனது அரசு, “நீலப்புரட்சி” (Blue Revolution) என்னும் மத்திய அரசு திட்டத்தினை செயல்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்துகிறது.

நீலப்புரட்சியானது 3 கூறுகளைக் கொண்டுள்ளது. அதில் “நன்னீர் மீன்வளர்ப்பு மேம்பாடு” என்ற திட்டத்தின்கீழ் ₹ 29.70 இலட்சம் தொகை அளவுக்கு 7 ஹெக்டர் பரப்புக்கு 50 விழுக்காடு மானியம், “உவர்நீர் மீன்வளர்ப்பு மேம்பாட்டுத்” திட்டத்தின்கீழ் ₹ 20 இலட்சம் தொகை அளவுக்கு 4 ஹெக்டர் பரப்புக்கு 50 விழுக்காடு மானியம் மற்றும் “பாரம்பரியப் படகை இயந்திரமயமாக்கல்” எனும் திட்டத்தின்கீழ் ₹ 1.20 கோடி தொகை அளவுக்கு 167 பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியம் அளிக்கப்படும். மீன்பிடி தடைக்காலத்தின்போது மீனவர்களின் வாழ்வாதார பாதிப்பின் அளவை கருத்தில் கொண்டு 21,950 மீனவக்குடும்பங்களுக்கு ₹ 11.97 கோடி அளவுக்கு மீன்பிடி தடைக்கால இடருதவி அளிக்கப்படும். மீன்வளர்ப்பு செயல்பாடுகளின்கீழ் 60 ஏக்கர் பரப்பை உள்ளடக்கியுள்ள உவர்நீர் மீன்பிடி மீனவர்களுக்கு ₹ 6 இலட்சம் தொகை அளவுக்கான மானியம், ஏக்கர் ஒன்றுக்கு ₹ 10,000 வீதத்தில் அளிக்கப்படும்.

**16.** மீனவர்களின் பயன்பாட்டினை கருத்தில்கொண்டு பெரியகாலாப்பட்டு, நல்லவாடு மற்றும் பன்னித்திட்டு மீனவ கிராமங்களில் டீசல் பங்க்குகள் அமைக்கப்படும். புதுச்சேரி யூனியன் பிரதேச மீன்வளம் மற்றும் மீனவர் மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்படவுள்ளது. ஏனாம் பகுதியில் உள்ள சாவித்திரி நகரில் மத்திய அரசின் நிதி உதவியுடன் பனிக்கட்டி மற்றும் குளிர்சாதன நிலையம் அமைக்கப்படும். மத்திய அரசின் “நீலப்புரட்சி”

திட்டத்தின்கீழ் நிதிஉதவி பெற்று காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் மீன்பிடித் துறைமுகம் இரண்டாம் கட்டமாக விரிவாக்கம் செய்யப்படும். மீன்வளத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட பங்க்குகளின் மூலமாக மானிய விலையில் கொடுக்கப்படும் டீசல் போக மீனவர்களுக்கு அதிகப்படியாக தேவைப்படும் டீசலை சந்தை விலைக்கே அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மூர்த்திக்குப்பம், புதுக்குப்பம் பகுதியில் மீன்பிடி படகு தங்குதளம் ஏற்கனவே தொடங்கப்பட்டு, நிலுவையில் உள்ள வேலைகளை செய்து முடிக்க குழு அமைக்கப்பட்டு சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகிறது. காரைக்கால் பகுதியில் தனியாக ஒரு மீன்பிடி துறைமுக நிர்வாக சங்கம் தொடங்கப்படும்.

**வணிக வரி**

**17.** எனது அரசு, சரக்கு மற்றும் சேவை வரியை (GST) சுமூகமாக செயல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. மேலும், இந்த மேன்மைமிகு பேரவையானது, 2017ஆம் ஆண்டு புதுச்சேரி சரக்குகள் மற்றும் சேவை வரிச் சட்ட முன்வரைவை ஒருமனதாக நிறைவேற்றியுள்ளது. தற்போதுள்ள வணிகர்களில் 80 விழுக்காட்டுக்கும் மேலான வணிகர்கள், துறையால் நடத்தப்பட்ட உதவி மையங்கள் (Help Desks) மற்றும் சிறப்பு

முகாம்கள் மூலமாக சரக்குகள் மற்றும் சேவை வரிக்கு மாறுவதற்கு பதிவு செய்துள்ளனர். எஞ்சியுள்ள வணிகர்களின் மாற்றமானது விரைவில் செய்து முடிக்கப்படும். துறையின் அலுவலர்கள் GST மென்பொருள் மற்றும் GST சட்டம் குறித்த புத்தாக்க பயிற்சியை மேற்கொண்டுள்ளனர். வணிகர்களுக்கு இது குறித்து தொடர்ந்து அறிவுறுத்தும் நிகழ்வுகள் நடத்தப்படும். GSTயை செயல்படுத்துவதற்கு தேவையான தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்புகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. வணிக வரித்துறை அதிகாரிகள் இலக்குகளுக்கு அதிகப்படியான வரியை வசூலிக்கும் பட்சத்தில் அவர்களுடைய செயல்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**கூட்டுறவு**

**18.** பொருளாதார அதிகாரத்தின் மீதான ஒருமுகச் சிந்தனையைத் தடுத்தல், உற்பத்தி திறன் வளஆதாரங்களின் உரிமையைப் பரவலாக்குதல், மேம்பாட்டுத் திட்டங்களில் மக்களை செயல் திறனுடன் பங்கேற்கச் செய்தல், வறுமையையும், வேலைவாய்ப்பின்மையையும் ஒழித்தல் ஆகியவை கூட்டுறவு இயக்கத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும். கடந்த நிதி ஆண்டின்போது கூட்டுறவுத் துறையில் எட்டப்பட்ட குறிப்பிடத்தக்க சில சாதனைகளை மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

- புதுச்சேரி மையக்கூட்டுறவுப் பொருள் வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கமானது 3 மெட்ரிக் டன் அளவு அறைக்கும் திறனை அதிகப்படுத்தி அதன் அரிசி ஆலையை நவீனப்படுத்தியுள்ளது.

- நெசவாளர் அல்லது அவர்களது வாரிசுதாரர்களுக்கு அளிக்கத்தக்க மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியமானது அவர்களின் வயதுவரம்பு அடிப்படையில் முறையே மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

- தொடக்கக்கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் அட்டவணை இன (SC) உறுப்பினர்களுக்கான வட்டி மானியம் 4 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், தொடக்கக்கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் அட்டவணை இன உறுப்பினர்கள் தவிர பிற உறுப்பினர்களின் வட்டித் தள்ளுபடியானது 3 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

- காலம் கடந்த அசல் நிலுவை மற்றும் காலங்கடந்த வட்டி நிலுவை முழுவதையும் 30-6-2016ஆம் தேதியன்று செலுத்த முன் வருகிறவர்களுக்கு மட்டும் வீட்டுவசதிக்கடன் மீதான அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான அறிவிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**19.** எனது அரசு, மாநில கூட்டுறவு வங்கி மற்றும் நகரக கூட்டுறவு வங்கி மூலமாக நீண்ட பருவகாலக் கடனளிக்க உத்தேசித்துள்ளது. நெல்தானிய சேமிப்பு கிடங்கின் வளர்ந்துவரும் தேவையை எதிர்கொள்ளும் பொருட்டு, புதுச்சேரி மைய கூட்டுறவு பொருள் வழங்கல் விற்பனை சங்கத்தில் எஃகு இரும்பிலான சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும். கவனமாக ஆராய்ந்த பின், கூட்டுறவு நிலையங்களின் செயல்பாடுகளை ஆற்றல்மிக்க சில பகுதிகளில் பன்முகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் துறையுடன் ஒருங்கிணைந்து திறன் மேம்பாட்டு செயல் திட்டங்கள் புதுச்சேரி மாநில கூட்டுறவு ஒன்றியத்தில் நடத்தப்படும். பல்வேறு பாட வகுப்புகளை நடத்துவதற்காக அதன் கிளை காரைக்காலில் திறக்கப்படும். இந்த அரசு, நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகளை குழு அமைத்து ஆய்வு செய்து, குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தீர்வுகாண தக்க நடவடிக்கை எடுக்கும்.

**20.** பால் தரும் பசுக்களின் வளர்ந்துவரும் தீவனத் தேவைகளைத் ஈடு செய்யும் பொருட்டு எனது அரசு, அசோலா தாவரத்தை பயிரிடுவதற்காக விவசாய கருவிக்கலப்பெட்டி மற்றும் இடு பொருட்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்காக தொடக்கநிலை கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நிதி உதவி அளிக்க உத்தேசித்துள்ளது.

புதுச்சேரி மாநில நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கைத்தறித் துறையில் உற்பத்தி செலவை குறைக்கும் பொருட்டும், வருவாயை அதிகரிக்கும் பொருட்டும் இடைநிகழ்வான மற்றும் முன்நெசவு செயல்பாடுகளின் சாத்தியங்களை ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி கூட்டுறவு கட்டிட மையமானது, அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிலையங்களில் ₹ 2 கோடி வரையில் புதுச்சேரி அட்டவணைப் படுத்தப்பட்ட விலை வீதத்தில் கட்டடப்பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படும். கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலை புனரமைப்புத்திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்.

**பள்ளிக்கல்வி**

**21.** அரசு பள்ளிகளில் பயிலும் பெரும்பாலான மாணவர்கள் மிகவும் வறுமை நிலையில் உள்ள சமூகபொருளாதார பின்னணியிலிருந்து பயிலுகின்றனர் என்பதையும் அவர்கள் உயர்கல்வி கட்டணத்தைச் செலுத்துவதற்கு மிகவும் துன்பப்படுகின்றனர் என்பதையும் எனது அரசு முழுமையாக அறிந்துள்ளது. அவர்களுடைய துன்பத்தைப் போக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 75 விழுக்காடு மதிப்பெண்களுக்குமேல் பெற்று மேனிலைக் கல்வி நிறைவு செய்த சென்டாக் (CENTAC) மூலம் மருத்துவம் மற்றும் பொறியியல் ஆகிய தொழிற்பாடப்பிரிவுகளில்

சேர்க்கை பெறுகிற வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மாணவர்களுக்கான கல்விக்கட்டணம் முழுவதையும் அவர்களுக்கு திரும்ப செலுத்துவதற்கு எனது அரசு உத்தேசித்துள்ளது. அனைத்து அரசு பள்ளிகளுக்கும் உள்கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்காக பள்ளிக்கட்டடங்கள் புனரமைக்கும் / பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இடிந்த நிலையில் உள்ள கலவைக் கல்லூரி மற்றும் வ.உ.சி. மேனிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளின் பாரம்பரியக் கட்டடங்கள் புனரமைக்கப்படும். திருக்கனூரில் சமுதாயக் கூடத்தில் தற்பொழுது செயல்பட்டுவரும் உயர்நிலைப்பள்ளியை அதே இடத்தில் புதியதாக கட்டடம் கட்டி மேனிலைப் பள்ளியாக மாற்றப்படும். ஏனாம், கிரேம்பேட்டாவில் ஜூனியர் காலேஜ் (கலைப் பிரிவு) கட்டுவதற்கு ஆவன செய்யப்படும். மேலும், தரியல்திப்பாவில் மத்திய சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். முன் மழலையர் கல்வித்திறனை மேம்படுத்த போதுமான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவர்.

**22.** NEET மற்றும் பிற போட்டித் தேர்வுகளை மாணவர்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் பொருட்டு, அவர்கள் அத்திறனைப் பெறுவதற்காக, கடந்த ஆண்டில் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட NEET சிறப்பு வகுப்புகள் இந்த ஆண்டு 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் நீட்டிக்கப்படும். 2017-18ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆசிரியர்கள் மற்றும்

பள்ளிகளின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு, ஆய்வுப்பிரிவு ஒன்றை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவின்கீழ் 7 குழுக்கள் அமைக்கப்படும். அதில் நான்கு குழுக்கள் புதுச்சேரி வட்டாரப் பகுதியிலுள்ள அனைத்து பகுதிகளையும், மூன்று குழுக்கள் காரைக்கால் வட்டாரப் பகுதியிலுள்ள அனைத்து பள்ளிகளையும் கண்காணிக்கும்.

**23.** எனது அரசு, கல்வித்தரத்தை மேம்படுத்துவதில் முனைப்புடன் உள்ளது. பள்ளி மாணவர்கள் சேர்க்கையிலும் மாணவர்களைத் தொடர்ந்து பள்ளியில் பயில வைப்பதிலும் தேசிய அளவில் முன்னிலையில் உள்ளது. அரசுப் பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, மாணவர்களை அறிவியல் மற்றும் கணிதப் பாடங்களில் தரப்படுத்துவதற்காக அனைத்து அரசு நடுநிலைப்பள்ளி உயர்நிலைப்பள்ளி மற்றும் மேனிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் மற்றும் கணித கருவிக்கலப்பெட்டி தொடர்ந்து வழங்கப்படும். முதலில் 60 பள்ளிகளுக்கு மின்-பாடப்பொருள் பதிவேற்றப்பட்ட கைக்கணினி (Tablet) வழங்கப்படும். மாணவர்களின் கற்றல் நிலையை உயர்த்து வதற்காகவும், கையெழுத்தை மேம்படுத்துவதற்காகவும் அனைத்து தொடக்கப்பள்ளிகளுக்கும் கற்றல் செயல்பாட்டுப் புத்தகம் மற்றும் கையெழுத்துப் பயிற்சி புத்தகம் ஆகியவை வழங்கப்படும். பள்ளி மாணவர்களுக்கிடையே வாசிக்கும்

பழக்கத்தை மேம்படுத்துவதற்காக அனைத்துத் தொடக்கப்பள்ளிகளுக்கும் “வாசிக்கும் தனியிடம்” (Reading Corners) அமைக்கப்படும். ஆங்கில மொழியில் வல்லமையையும் தகவல் திறனையும் மேம்படுத்துவதற்கு அனைத்து நான்கு வட்டாரப் பகுதிகளிலும் மொழி ஆய்வுக்கூடம் அமைக்கப்படும். நல்ல மனவளத்தைப் பராமரிப்பதற்காகவும், கற்றலுக்கு உகந்த சூழலை அளித்திடவும் அரசு பள்ளிகளில் ஆலோசனை வழங்கப்படும். இணையத்தைப் பயன்படுத்துவதற்கும் கற்பித்தலுக்காகக் கிடைக்கப்பெறும் தகவலைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு இணைய இணைப்பு வசதி அளிக்கப்படும். தனித்தகுதியை ஊக்குவிப்பதற்காக மாதிரிப்பள்ளிகள் தொடங்கப்படும். தனியார் பங்களிப்போடு புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்படும்.

**24.** மாணவர்களுக்கிடையே விளையாட்டுச் செயல்பாடுகளை அதிகரிக்கும் நோக்கில் (i) புதுச்சேரி, கதிர்காமம், இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரியில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் கட்டவும், (ii) புதுச்சேரி, உப்பளம், இந்திரா காந்தி விளையாட்டு வளாக மைதானத்தில் செயற்கை தடகளப் பாதை அமைக்கவும், (iii) நடப்பாண்டின்போது ₹ 5 கோடி செலவில் புதுச்சேரியில்,

தந்தை பெரியார் நகரில் நீச்சல்குளம் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. புதுச்சேரி சாரம் பகுதிகளில் மகளிர் தங்கும் விடுதி ₹ 9 கோடி செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாகூர், சேலியமேடு மற்றும்  வில்லியனூர் பகுதியில் உள்விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும். காலாப்பட்டு பகுதியில் ₹ 50 கோடி செலவில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், சிறிய உள் பூப்பந்தாட்ட விளையாட்டு அரங்கம் ஒன்று T.R. பட்டினத்தில் அமைக்க உத்தேசித்துள்ளது. விளையாட்டில் மாணவர்களை ஊக்குவிப்பதற்கும் அடிப்படை நிலையில் விளையாட்டை மேம்படுத்துவதற்கும் வெவ்வேறு விளையாட்டுப் போட்டிகளில் படித்தொகைகள் மற்றும் பரிசுப் பணத்தை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்கள் தேசிய பள்ளி விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, எனது அரசு, தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் வெண்கலப்பதக்கம் பெறுபவர்களுக்கு ரொக்கப் பரிசு அளிக்க உத்தேசித்துள்ளது.

**25.** கல்வியில் அண்மைக்கால நவீன முன்னேற்றங்கள் குறித்து ஆசிரியர்கள் திறன் பெறுவதற்காக தொடக்கநிலை மற்றும் இடைநிலை வகுப்புகளை நடத்தும் 1,669 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். மேலும், இவ்வாட்சிப்பரப்பு பள்ளிகளில் பணியாற்றும் 246 தலைமையாசிரியர்களுக்கு பள்ளித் தலைமைப் பண்புகளை மேம்படுத்துவதற்காக பயிற்சி அளிக்கப்படும். நகர்ப்புற

மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகள் பொதுத் தேர்வுகளில் பெறும் தங்களது தேர்ச்சி விழுக்காட்டுக்காக தற்போது அப்பள்ளிகளுக்கு அளிக்கப்படும் ரொக்க ஊக்கப்பரிசு மட்டுமின்றி நகர்ப்புற பள்ளிகளில் 90 விழுக்காடு தேர்ச்சி பெறும் அரசு பள்ளிகளுக்கும் ₹ 1 இலட்சம் ரொக்க ஊக்கப்பரிசு அளிக்க எனது அரசு உத்தேசித்துள்ளது. மாணவர்களின் மனஅழுத்தத்தைக் குறைக்கும் பொருட்டு, அரசுப்பள்ளிகளில் அவர்களுக்கு மனவள ஆலோசனை வழங்கப்படும். அசோசியேட் என்.சி.சி. அதிகாரிகளுக்கு வழங்கப்படும் தகுதிநிலை ஊதியம் மற்றும் மதிப்பூதியம் இந்த நிதி ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படும்.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**26.** மாணவர்களுக்கு இலவச இணைய வசதி அளிப்பதற்காக நடப்பு ஆண்டில் அனைத்து அரசு கல்லூரி வளாகங்களிலும் WiFi இணைப்பு அளிக்கப்படும். புதுச்சேரி பொறியியல் கல்லூரியைப் பல்கலைக்கழகமாக நிலை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். காரைக்கால் பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிலையம், இப்பல்கலைக் கழகத்தின் ஓர் உறுப்புக் கல்லூரி என்ற தகுதி நிலைக்கு உயர்த்தப்படும். எனது அரசு, டாக்டர் அம்பேத்கர் சட்டக்கல்லூரியைச் சட்டப் பல்கலைக்கழகமாக நிலை உயர்த்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. தர மேம்பாட்டுக்காக

அரசுக் கல்லூரிகளின் செயல்பாடுகளைத் தரநிலைப்படுத்தும் பொருட்டு, புதுச்சேரியில் உள்ள அனைத்து அரசு கல்லூரிகளுக்கும் ISO தரச் சான்றிதழ் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு அதிகரித்துவரும் தேவையைக் கருத்தில் கொண்டு, எனது அரசு, இக்கல்வி ஆண்டின்போது கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பாடப்பிரிவுகளில் 1,140 இடங்களை அதிகரிக்கும்படிக் கோரி புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்குச் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளது. "ராஷ்ட்டிரிய உச்சதார் சிக்ஷா அபியான்" (RUSA) திட்ட நிதி உதவியுடன் ₹ 38 கோடி செலவில் அனைத்து அரசுக் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். நடப்பு ஆண்டின்போது, புதுச்சேரி உயர்கல்வி சட்டமுன்வரைவை இயற்றி புதுச்சேரி உயர்கல்விக் குழு பலப்படுத்தப்படும். அனைத்து கல்லூரிகளையும் கல்விசார் மற்றும் நிர்வாகத் தணிக்கை செய்வதற்கும் உயர்கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்வதற்கும் சிறந்த கல்வியாளர்களைக் கொண்ட குழு ஒன்று புதுச்சேரி உயர்கல்விக் குழுவால் உருவாக்கப்பட்டுள்ளது.

**27.** புதுச்சேரியில் உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக, வில்லியனூர் கஸ்தூரிபாய் பெண்கள் கல்லூரி, பெண்கள் NAAC சான்றளிப்பு பெற்றிருப்பதுடன்,

இவ்வாட்சிப்பரப்பில் அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் NAAC சான்றளிப்பைப் பெற்றுள்ளன. எனது அரசு, 2017-18ஆம் ஆண்டின்போது, பல்தொழில்நுட்ப நிலையங்களின் மூலம் "சமுதாய மேம்பாடு" என்னும் மைய ஆதரவுத் திட்டத்தின்கீழ் 1,700 நபர்களுக்கு குறுகிய கால முறை-சாரா திறன் பயிற்சி அளிக்க உத்தேசித்துள்ளது.

**நலவழி**

**28.** பொது சுகாதார உள்கட்டமைப்பை பலப்படுத்தி எளிதில் பெறக்கூடிய இலவச சுகாதாரப் பாதுகாப்பை அளிக்க எனது அரசு உறுதிபூண்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பின் பெரும்பாலான சுகாதாரக் குறியீடுகள் தேசிய சராசரியை விடவும் உயர்நிலையில் உள்ளன. எனினும், சென்னை பிரண்டியர் லைஃப் லைன் மருத்துவமனையுடன் இணைந்து புதுச்சேரி இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிலையத்தில் 116 இதய அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாகச் செய்யப் பட்டுள்ளன. வறுமைக்கோட்டுக்குக்கீழுள்ள குடும்பங்கள் உயர்நிலை மருத்துவமனைகளில் சிறப்பு நிலை சிகிச்சை பெறுவதற்காக இந்த அரசு 587 பயனாளிகளுக்கு ₹ 5.77 கோடி நிதி அளித்துள்ளது. அரசு மருத்துவமனைகளில் பயன்படுத்துவதற்காக வெவ்வேறு நவீன மருத்துவக் கருவிகள் ₹ 1.87 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. உயர் தொழில்நுட்பமிக்க ஆப்டிக்கல்

கோஹரன்ஸ் டோமோகிராப் (Hi-tech Optical Coherence Tomograph) டிஜிட்டல் ரேடியோகிராபி சிஸ்டம், வீடியோ கேஸ்ட்ரோஸ்கோப் மற்றும் வீடியோ கொலொனேஸ்கோப்பி ஆகிய கருவிகள் அவற்றுள் சிலவாகும்.

**29.** இவ்வாட்சிப்பரப்பில் "தேசிய சுகாதாரத் திட்ட" இலக்கை நிறைவேற்றும் பொருட்டு, எனது அரசு, வெவ்வேறு சுகாதாரச் சேவைகளைத் திறம்படச் செயல்படுத்தி வருகிறது. இதற்காக 2016-17ஆம் ஆண்டின்போது ₹ 28.37 கோடி தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பில் சுகாதாரத் துறையைப் பலப்படுத்துவதற்காக 136 மருத்துவப் பணியாளர்கள் புதியதாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களில், 33 மருத்துவர்கள் மற்றும் 18 செவிலியர்கள் உள்ளடங்குவர். 58 சுகாதாரப் பணியார்களுக்குப் பதவி-உயர்வு வழங்கப்பட்டது. மறைந்த தொழிலாளர்களின் 78 பிள்ளைகளுக்கு கருணை அடிப்படையிலான பணி அளிக்கப்பட்டுள்ளது.

**30.** இவ்வாட்சிப்பரப்பை பொறுத்தவரையில் சுகாதாரச் சேவைகள் சிறந்த நிலையில் உள்ளன. தகுதியுடைய மக்களுக்கு போதிய அளவில் சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. எனினும், பொதுமக்கள் நவீன மருத்துவ பாதுகாப்பைப் பெறும் நிலையில் மருத்துவச் சேவையை மேம்படுத்தும் பொருட்டு, எனது அரசு,

உயர்நிலைச் சுகாதார நிலையங்களில் நவீன உள்கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்த உத்தேசித்துள்ளது. NRHM-NCD செயல் திட்டத்தின்கீழ் காரைக்காலில் தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU) தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. “மத்திய மருத்துவக் கருவி வழங்கல் துறை” ஒன்று புதுச்சேரி ராஜீவ்காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் தொடங்கப்படும். பல்நோக்கு CT ஸ்கேன் கருவி (Multislice CT Scanner) ஒன்றும் கொள்முதல் செய்யப்படும். குடும்ப நலத்திட்டத்தின் ஒரு பகுதியாக, புதுச்சேரி, ராஜீவ்காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் அளிக்கப்பட்டுவரும் மகப்பேறிண்மையை போக்கும் சேவைகளில் (Infertility Service) செயற்கைக் கருவூட்டல் (Intra-Uterine Inseminations) சிகிச்சையையும் உள்ளடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**31.** பல்லுறுப்பு மாற்று அறுவைசிகிச்சை அளிப்பதற்கும், விபத்துப் பாதுகாப்பு மையத்தை பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதிகரித்துவரும் விபத்துக் காயங்களைக் கருத்தில்கொண்டு, குறிப்பாக முதுகுத்தண்டுகாய விபத்துக்களைக் கருத்தில்கொண்டு இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் முதுகுத்தண்டு காயத்திற்கென தனியொரு பிரத்தியேக மையத்தை உருவாக்க

உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து வகையான மருத்துவப் பொருள்கள் மற்றும் பிற பொருள்களைச் சேமித்துவைப்பதற்காக நவீன பண்டகசாலை ஒன்றை அரசு தலைமை மருந்தகத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விபத்தில் சிக்கிய நோயாளிகளை மருத்துவப் பாதுகாப்புடன் உடனடியாக அருகில் உள்ள உயர்நிலை மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதை உறுதிசெய்யும் பொருட்டு, 108 ஆம்புலன்ஸ் வாகனச் சேவையைப் "புற ஒப்படைப்பு" (Out Sourcing) முறையில் பெறுவது குறித்து ஆராயப்படும். அதிகரித்து வரும் விபத்துக்களின் எண்ணிக்கையையும் தீவிர மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை அவசர நிலைகளில் தரமான மருத்துவப் பாதுகாப்பு அளிப்பதற்கான தேவையையும் கருத்தில்கொண்டு, நலவழித் துறையானது, தீவிர சிகிச்சை சேவைகளை (ICU Services) அரசு-தனியார் பங்கெடுப்பு முறையின்கீழ் (PPP Mode) புற ஒப்படைப்பு (Out Sourcing) செய்ய உத்தேசித்துள்ளது. தீவிர சிகிச்சை (ICU) சேவைகள் அளிக்கும் பொருட்டு, புதுச்சேரி, இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிலையத்தில் 30 படுக்கைகள், காரைக்காலில் 8 படுக்கைகள், மாகி மற்றும் ஏனாமில் தலா 6 படுக்கைகளுடன் தொடக்கத்தில் 50 படுக்கைகள் கொண்ட முன்னோடித்திட்டம் தொடங்கப்படும். இதை புற ஒப்படைப்பு (Out Sourcing) மூலம்

நடத்த மின்-சுகாதாரத் திட்டத்தை (e-Health) ஒவ்வொரு கட்டமாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இறுதி நிலையில் உள்ள புற்றுநோய் பாதித்த நோயாளிகளுக்கு கடைநிலை தணிப்பு மருத்துவத்தைத் தொடங்க எனது அரசு உத்தேசித்துள்ளது.

32. சுகாதார நிலையங்களில் விரைவான மற்றும் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளைப் பெறுவதற்காக இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். ₹ 5.88 கோடி மதிப்பீட்டுச் செலவில் சேதராப்பட்டு, பாகூர் மற்றும் வில்லியனூரில் ஆரம்ப சுகாதார மையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ₹ 1.68 கோடி செலவில் தேங்காய்த்திட்டு, உறுவையாறு, மணலிப்பட்டு மற்றும் தட்டாஞ்சாவடி துணைச்-சுகாதார மையங்களுக்கான சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதுச்சேரி, வில்லியனூரில் 50 படுக்கைகள் கொண்ட ஆயுஷ் மருத்துவமனைக் (AUYUSH Hospital) கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்படவுள்ளது. அரசு ஓய்வூதியதாரர்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்டம் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. காரைக்கால் பகுதியில் மாதிரி அடிப்படையில் பொது மருத்துவக் காப்பீட்டு திட்டம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**33.** புதுச்சேரி, இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், நோய்க் குறியியல் (Pathology) பிரிவில் 2 இடங்கள் மற்றும் சமுதாய மருந்துப் (Community Medicine) பிரிவில் 4 இடங்களைக் கொண்ட மருத்துவப் மேற்படிப்புப் பாடப்பிரிவைத் தொடங்குவதற்கு மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து நடப்புக் கல்வி ஆண்டில் முதல் தொகுதியாக புதுச்சேரியைச் சேர்ந்த 6 மாணவர்கள் சேர்க்கை அளிக்கப்பட்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செய்தி மற்றும் விளம்பரம்**

**34.** ஜனநாயகத்தின் நான்காவது தூணாக பத்திரிகை துறை விளங்குகிறது. பத்திரிகை துறையில் பணிபுரிபவர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இந்த ஆண்டு முதல் எனது அரசு அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தின்கீழ் இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு பத்திரிகையாளரின் குடும்பத்திற்கும் ₹ 3 இலட்சம் அளவிற்கு மருத்துவக் காப்பீடு அளிக்கப்படும். மேலும், அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் / ஊடக பணியாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், அக்காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அவர்களின் பிள்ளைகளுக்கு படிப்பு உதவித் தொகை வழங்கப்படும். இதுவரை

வீட்டு மனை பெறாத அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு மனை வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற எனது அரசு முடிவு செய்துள்ளது.

**தகவல் தொழில் நுட்பம்**

**35.** புதுச்சேரி அரசின் டிஜிட்டல் வலைப்பின்னலுக்கு முதுகெலும்பாக விளங்கும் மாநில விவர மையம் மேம்படுத்தப்படும். இதனால் தகவல் பரிமாற்றம் விரிவுபடுத்தப்படும். பிரதம மந்திரி கிராம டிஜிட்டல் திட்டத்தின்கீழ், கணினிகளை இயக்கவும், டிஜிட்டல் கருவிகளை கையாளவும், 28,000 ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க எனது அரசு 11 துறைகளைச் சார்ந்த 72 பணிகளுக்கு தற்போது அளிக்கப்படும் மின்னணு சேவைகள் விரிவுபடுத்தப்படும். இவ்வாட்சிப்பரப்பில் அதிக தகவல் தொழில்நுட்ப தொழிற்சாலைகள் அமைக்கும் வகையில், ஒரு புதிய தகவல் தொழில்நுட்ப கொள்கையை எனது அரசு விரைவில் கொண்டுவரும்.

**தொழிலாளர் நலன்**

**36.** நடப்பு நிதி ஆண்டிற்கு இத்துறைக்கு ₹ 11.81 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை அமைப்பதற்கான உரிமம் மற்றும் வரைபட அனுமதி மின்அஞ்சல் மூலம் அளிக்கப்படுகிறது. வணிகம் செய்வதை எளிதாக்கும் வகையில், பல்வேறு

சட்டங்களின்கீழ் பெறவேண்டிய உரிமங்கள் மற்றும் தாக்கல் செய்யவேண்டிய படிவங்கள் மின்அஞ்சல் மூலம் செயல்படுத்தப்படும். அமைப்பு-சாரா சங்கம், ஒரு வாரியமாக மாற்றப்படும். இதனால் உறுப்பினர்களுக்கு சிறந்த நலத்திட்டங்களை அளிக்கமுடியும். தற்போது அளிக்கப்படும் உதவித் தொகையுடன், தொழிலாளர் நல வரி விதிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் பிற கட்டுமான தொழிலாளர்கள் நலனுக்காக விரிவான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளவும், மருத்துவ பாதுகாப்பு திட்டத்தை அமல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐம்பொன்தொழிலாளர் நலச்சங்கத்திற்கு இந்த ஆண்டும் ₹ 10 இலட்சம் தொடர்ந்து வழங்கப்படும்.

**37.** கட்டுமான தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடங்களிலேயே சிகிச்சை அளிக்கும் வகையில் ஒரு நடமாடும் சிகிச்சை திட்டம் அறிமுகப்படுத்தப்படும். சென்ற ஆண்டு பிரதம மந்திரி திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1,570 வேலையற்ற இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், புன்னகை திட்டத்தின்கீழ் காவல்துறை உதவியுடன் தெருவோர குழந்தைகள் 150 பேருக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. ₹ 2.60 கோடி செலவில் 3,500 வேலையற்ற இளைஞர்களுக்கு அவர்களுக்கு வேலை கிடைக்கும் வகையில்

தகுதி திறன் பயிற்சி அளிக்கப்படும். ₹ 50 இலட்சம் செலவில் முன் கற்றல் அங்கீகார திட்டத்தின்கீழ், கட்டுமானத் தொழிலாளர்களின் திறனை அங்கீகரிக்கும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி நடத்தப்படும். தற்போது 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் படிப்பு உதவித் தொகையாக ₹ 1,200 வழங்கப்படுகிறது. இத்திட்டம் காப்பீட்டு முறை மூலம் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கு நீட்டிக்கப்படும். தற்போது காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் விபத்தினால் மரணமடையும் கட்டுமான தொழிலாளர்களுக்கு ₹ 75,000 வழங்குவதோடு, கட்டுமான வாரியத்தின் மூலம் ₹ 2.25 இலட்சம் கூடுதலாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டத்தின்கீழ் கூடுதல் காப்பீடு பயன்பெறும் வகையில் அனைத்து உறுப்பினர்களும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படுவர்.

**துறைமுகம்**

**38.** துறைமுகம், மீன்வளம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளின் மூலம் கிடைக்கும் பல்வேறு நன்மைகளை கருத்தில் கொண்டு எனது அரசு NIOT மூலம் கடற்கரை மேம்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. இதனால், ஆற்றுமுகத்துவாரம் ஆழப்படுத்தப்படும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக

₹ 22 கோடி செலவில் கடற்கரை மேம்படுத்தப்படும். மண்வாரும் வேலை முடிந்த பின்னர் இந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் வணிக அளவில் சரக்குகளை கையாள எனது அரசு சென்னை துறைமுக கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. துறைமுக செயல்பாடுகள் மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதுடன், அரசுக்கு வருவாயும் கிடைக்கும். சென்னை துறைமுகம் புதுச்சேரி துறைமுகத்தை அதன் துணை துறைமுகமாக அறிவித்துள்ளது என்பதை உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், இந்த ஆண்டு 4 இலட்சம் டன் சரக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும். இது அடுத்த ஆண்டில் 10 இலட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சரக்கு ஊர்திகள் மற்றும் மீன்பிடிக் கலன்கள் எளிதில் பயணிக்கும் வகையில் காலம் தோறும் முறையாக மண்வாரும் பணி மேற்கொள்ளப்படும். காரைக்கால் துறைமுகப் பணிகள் மூலம் சென்ற ஆண்டில் அரசுக்கு ₹ 10.80 கோடி வருவாய் கிடைத்தது. மேலும் சரக்குகள் வரத்து அதிகமாகும்போது வருவாயும் கூடுதலாகும்.

**மின்விசை**

**39.** பொருளாதார மேம்பாட்டிற்கு, மின்விசை ஒரு முக்கியமான காரணியாகும். வேளாண் மற்றும் தொழிற்சாலைகள் நடவடிக்கைகள் அதிகரிக்கும்போது, மின் தேவையும் அதிகரிக்கிறது.

இவ்வாட்சிப்பரப்பில் மின் தட்டுப்பாடு இல்லை என்றாலும், நிலையான மற்றும் தடையற்ற மின்சாரத்தை அளிப்பது அவசியமாகிறது. R-APDRP-என்ற திட்டத்தின்கீழ், ₹ 8 கோடி செலவில் 42,500 மின் இயந்திர மீட்டர்களை மாற்றவும், ₹ 4.65 கோடி செலவில் நகரப்பகுதியில் தற்போதுள்ள எண்ணெய் RMUக்களை SF6 RMUக்களாக மாற்றவும், ₹ 3.83 கோடி செலவில் 50 எண்ணிக்கையிலான 22 K.V. 315 K.V. ஆம்பியர் மின்மாற்றிகளை மாற்றவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**40.** நகரப்பகுதி மற்றும் முத்தியால்பேட்டை பகுதியில், தரமான மின்சாரத்தை தங்குதடையின்றி வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் வெங்கட்டா நகர் 110 K.V. துணைமின் நிலையத்திலிருந்து ₹ 14.90 கோடி செலவில், பூமிக்கு அடியில் செல்லும் 5 எண்ணிக்கையிலான 11 K.V. புதை மின்வடங்கள் அமைக்கப்படுகிறது. இத்திட்டம், உலக வங்கி நிதி உதவியுடன் CDRRP திட்டத்தின்கீழ், திட்ட அமலாக்க முகமை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் கணபதிசெட்டிக்குளம், அரியாங்குப்பம் R.K. நகர், பூரணாங்குப்பம், நரம்பை, பன்னித்திட்டு மற்றும் அதைச்சுற்றி உள்ள பகுதிகளில், குறைந்த அழுத்த மின்வழித்தடங்களை பூமிக்கு அடியில் செல்லும் வகையில் மாற்றி அமைக்கும் பணி ₹ 56.66 கோடி செலவில்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது இந்த நிதி ஆண்டிற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தடையற்ற மின்சார வழங்கலை உறுதி செய்வதற்காக, மேல்நிலை மின்பாதைகளை புதைவட மின் பாதைகளாக மாற்ற காரைக்கால் மாவட்ட கடலோர பகுதிகளில் ₹ 50 கோடி செலவிலும், ஏனாம் கடலோர பகுதிகளில் ₹ 28.3 கோடி செலவிலும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி நிதி உதவியுடன் இப்பணிகளை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். புதுச்சேரி மாநிலம் முழுமைக்கும் தற்போது உபயோகத்தில் உள்ள குழல் மற்றும் சோடியம் வேப்பர் தெரு விளக்குகளை, திறன் அதிகம் உடைய எல்.இ.டி. விளக்குகளாக மாற்றும் திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்பணியை ஆறு மாத காலத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**41.** மின்வழங்களில் உள்ள இழப்பீட்டைத் தடுக்கவும், தரமான மின்சாரத்தை வழங்கிடவும் ஒருங்கிணைந்த மின்மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ₹ 21.63 கோடி செலவில், மீட்டர் பொருத்துதல் (Capacitor Bank) வீட்டின் கூரைமீது சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டங்கள் போன்ற ஒருங்கிணைந்த திட்டத்தை செயல்படுத்த எனது அரசு உத்தேசித்துள்ளது. Smart Grid Pilot Project என்ற திட்டத்தின்கீழ் புதுச்சேரி புல்வார்டு பகுதிக்குள், ₹ 43.91 கோடி செலவில் 34,000 ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தும்பணி நடைபெற்றுவருகிறது. இந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் இப்பணி முடிவடையும்.

**42.** பெருகிவரும் மின் தேவையை சமாளிக்கும் பொருட்டு ஜப்பான் நிதி நிறுவனத்திடமிருந்து (JICA) கிடைக்கும் கடன் மூலம், மின் அனுப்புதல், வழங்கல் மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தியை வலுவாக்க, ₹ 1,169 கோடி செலவில் ஒரு திருத்திய விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடைந்தால் தரமான மின்சாரம் கிடைப்பதுடன், மின்சார அனுப்புதல் மற்றும் வழங்குதலில் உள்ள இழப்பு 11 விழுக்காடாக குறையும்.

**காவல்**

**43.** பாதுகாப்பான நகரம் என்ற திட்டத்தின்கீழ் ₹ 50.75 கோடி செலவில், காவல்துறைக்கு (i) ஒருங்கிணைந்த அறிவு மேம்பாடு மற்றும் கண்காணித்தல்; (ii) கட்டுப்பாட்டு அறை மேம்பாடு; (iii) பயங்கரவாத ஒழிப்பு மற்றும் வெடிகுண்டு தடுப்பு நடவடிக்கைகள்; (iv) தானியங்கி போக்குவரத்து மேலாண்மை முறை ஆகிய ஒருங்கிணைந்த திட்டம் மூலம் மேம்படுத்தப்படும்.

**44.** மத்திய நிதி உதவியுடன் ₹ 3.24 கோடி செலவில் தேசிய அளவில் அவசரகால உடனடி நடவடிக்கை எடுக்கும் முறை அமல்படுத்தப்படும். தற்போதுள்ள வாக்கி-டாக்கிகள் டிஜிட்டல் வாக்கி-டாக்கிகளாக மாற்றப்படும். காவல்துறையில் பல்வேறு பிரிவுகளில் 125 பதவிகளை உருவாக்கிட நடப்பு ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். காலியாக உள்ள 500 பதவிகள் நடப்பு

ஆண்டில் நிரப்பப்படும். மாகி மற்றும் ஏனாமில் கடலோர காவல் நிலைய கட்டுமானப் பணிகள் மற்றும் காரைக்காலில் கப்பல் சரக்கு இறக்குமிட கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டில் முடிவடையும். ஏனாமில் தரியல்திப்பா, புதுச்சேரியில் கரிக்கலாம்பாக்கம் ஆகிய இடங்களில் புறக்காவல் நிலையங்களும், இலாசுப்பேட்டை மற்றும் ரெட்டியார்பாளையம் ஆகிய இடங்களில் காவல் நிலையங்களுக்கு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**தீயணைப்பு**

**45.** பாகூரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு புதியதாக கட்டடம் கட்டப்படும். மடுகரை மற்றும் திருக்கனூரில் உள்ள தீயணைப்பு நிலையங்கள் புதுப்பிக்கப்படும். காலியாக உள்ள, 42 தீயணைப்பு வீரர்கள், 14 தீயணைப்பு ஓட்டுநர்கள், 2 நிலைய அதிகாரி பதவிகள் நடப்பு ஆண்டில் நிரப்பப்படும். மேலும் வில்லியனூர், தவளக்குப்பம், கரையாம்புத்தூர், லிங்காரெட்டிப்பாளையம் மற்றும் திருமலைராயன்பட்டிணம் ஆகிய இடங்களில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நடப்பு ஆண்டில் 4 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் 75 தீப்பிடிக்காத உடுப்புகள் வாங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பொதுப்பணிகள்**

**46.** பூமியான்பேட் பாவாணர் நகரில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள தடுப்பை தவிர்க்க மாரியம்மன் நகரில் உள்ள மூன்று குறுகிய பாலங்களை தென்னக இரயில்வே துறையுடன் இணைந்து (₹ 2.25 கோடி) அகலப்படுத்தவும், அதைத் தொடர்ந்து கால்வாய்களை மேம்படுத்தவும் (₹ 2.50 கோடி) திட்டமிடப்பட்டுள்ளது. வேகமான பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் முன்னேற்றத்திற்கும், உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்வதுதான் முக்கிய தேவை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இவ்வாட்சிப்பரப்பில் ₹ 71 கோடி செலவில் தேவையான பகுதிகளில் சாலைப்பணிகளை மேற்கொள்ள எனது அரசு உத்தேசித்துள்ளது. மேலும், ஆரியப்பாளையத்தில் சங்கராபரணி ஆற்றிலும், திருநள்ளார் கொம்யூன் அத்திப்படுகையில் அரசலாறு மற்றும் மேலகாசாகுடி வாஞ்சி ஆற்றிலும் 3 புதிய பாலங்கள் ₹ 51 கோடி செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ₹ 7.34 கோடி செலவில் மலட்டாற்றில் இருவழிப்பாலத்தை நான்குவழி பாலமாக மாற்றவும், பாகூர் உபரி வாய்க்காலில் ₹ 5.36 கோடி செலவில் பாலம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுக்குப்பத்திலிருந்து பன்னித்திட்டுவரை நரம்பை வழியாக ₹ 37 கோடி மதிப்பீட்டில் கடற்கரை சாலை அமைக்கப்படும். காரைக்கால் – திருநள்ளார் சாலை ₹ 11.75 கோடி செலவில் அமைக்கப்படும். படுதார் கொள்ளையில் புதியதாக

ஏரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஏனாமில் பிரெஞ்சு கால்வாய் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என மேன்மைமிகு இந்த அவைக்கு தெரியப்படுத்துகிறேன்.

**47.** அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கலை மேம்படுத்த கீழ்வரும் திட்டங்களுக்காக ₹ 14 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (i) கோட்டுச்சேரி அண்ணா நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி; (ii) அம்பகரத்தூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி; (iii) திருமலைராயன்பட்டிணத்தில் நீரேற்று நிலையத்துடன்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி; (iv) மாகியில் சேகரிக்கப்பட்ட நீர்த் தொட்டியிலிருந்து சமுதாய நீர் வழங்கீடு; (v) பள்ளூர் மற்றும் பந்தக்கல்லில் நீர் வழங்கீட்டு முறையை புதுப்பித்தல், ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் சுல்தான்பேட்டை, குரும்பாபேட், ஜெயராம் நகர், வேல்ராம்பட்டு, முத்தியால்பேட்டை, தானாம்பாளையம், ஆண்டியார்பாளையம், கொம்பாக்கம், கொம்பாக்கம் பேட், வில்லியனூர் மற்றும் கணுவாப்பேட்டை, உத்திரவாகிணிபேட்டை ஆகிய ஊர்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், குடிநீர்குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் ₹ 179.89 கோடியில் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், எல்லைப்பிள்ளைச்சாவடி, உழவர்கரை, சுதானா நகர் ஆகிய இடங்களில் கூடுதலாக ஆழ்துளை குழாய் கிணறுகள் ₹ 56 கோடி செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**48.** புதுச்சேரி நகர மற்றும் சுற்றுப்புறத்தை சேர்ந்த பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டம் AFD (Agence French Development) வங்கி உதவியுடன் ₹ 1,480 கோடி அளவில் மேற்கொள்ளப்படவுள்ளது. முதற்கட்டமாக (First phase) ₹ 534 கோடி அளவில் நகர மற்றும் சுற்றுப்புறத்தை சேர்ந்த பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த குடிநீர் திட்ட முன்வரைவு (DPR), மத்திய அரசின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் திட்டம் நடைமுறைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**49.** அரசு பணியாளர்களின் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, ₹ 1.50 கோடி செலவில் புதுச்சேரி, இலாசுப்பேட்டையில் அரசுப் பணியாளர் குடியிருப்பு வளாகத்தில் Type-II ‘AX’ தொகுதி குடியிருப்பைக் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பயன்பாட்டுக்கான உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தும் பொருட்டு, ₹ 2 கோடி செலவில் புதுச்சேரி, மறைமலை அடிகள் சாலையில் புதிய

பேருந்து நிலையத்தில் புதிய நகரும் படிப்பாதை (Escalator) அமைக்கப்படும். ₹ 65 கோடி செலவில் புதுச்சேரி CH 37/420இல் NH-66 மற்றும் NH-45A சந்திப்பில் இந்திரா காந்தி சதுக்கத்தில் படி நிலை இடையீட்டுப்பிரிவு (Grade separator) அமைக்கப்படும். ₹ 2.14 கோடி செலவில் RC-17 முருங்கப்பாக்கம் சாலையில், ஸ்ரீ அங்காளம்மன் கோயிலிலிருந்து வேல்ராம்பேட்டை மிகைநீர் வாய்க்கால் குறுக்கு வரையில் புதுச்சேரி முருங்கப்பாக்கத்தில் தாங்கு சுவர் கட்டுமானத்துடன் RC-17 முருங்கப்பாக்கம் சாலையில் இரண்டு புறங்களிலும் சரிவகக் கால்வாய் கட்டப்படும். புதுச்சேரி NH-66இல் ஜிப்மர் (JIPMER) அருகில் ₹ 5.15 கோடி செலவில் சுரங்க நடைபாதை – உடன் – வணிக வளாகம் கட்ட பணிகள் தொடங்கப்படும். பிள்ளையார்குப்பம், மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அருகில் உள்ள சந்திப்பில் ₹ 5 கோடி செலவில் வடிவியல் சார்ந்த மேம்பாடுகள் செய்யப்படும். இதைப்போலவே, ₹ 5.50 கோடி செலவில் தவளக்குப்பம் அரவிந்தர் கண் மருத்துவமனை அருகில் உள்ள சந்திப்பில் மேற்கொள்ளப்படும். காரைக்கால் விழுதியூரில் பல்நோக்கு சமுதாயக்கூடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தொழில்கள்**

**50.** எனது அரசு, கடந்த வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடரின்போது உறுதியளித்தவாறு 2016ஆம் ஆண்டு புதிய தொழிற்கொள்கையை அறிவித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அது, இங்குள்ள நில வங்கியைப் முனைப்புடன் பயன் படுத்துவதற்கு வழிசெய்கிறது. எனது அரசு, இந்த நிர்வாகத்தில் மின்-ஆளுகையை (e-Governance) அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளது. இந்த விரைவு அமைப்பு முறையில், தடையின்மைச் சான்றிதழ்கள் / உரிமங்கள் / இசைவுச் சான்றிதழ்கள் ஆகியவை 30 நாள் கால அளவுக்குள் அளிக்கப்படும். இதுகுறித்த தகவல் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் தொடர்புடைய துறைகளிடமிருந்து பெறப்படவில்லையெனில், "தடையின்மை அளித்ததாக கருதப்படும்". தொழிற்சாலைகள் வளர்ச்சிக்காக தகுந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கும், தொழில்துறை, தொழிலாளர் துறை, மின்துறை, மாசுக்கட்டுப்பாட்டு துறை, நகர மற்றும் கிராம அமைப்பு, மற்றும் அதைச்சார்ந்த துறைகளில் இருந்து பெறப்படும் உரிமம் பெறுவதற்கும் சுய சான்றிதழ் அளிப்பதை அறிமுகப்படுத்துவதற்கு எனது அரசு உத்தேசித்துள்ளது.

**51.** 2015-16ஆம் ஆண்டில், ₹ 45.06 கோடி முதலீட்டில் 66 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு அவை 556 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தன. புதிய தொழிற்கொள்கை அறிவிப்பு செய்த பின்பு, 2016-17ஆம் ஆண்டின்போது, 112 தொழிற் சாலைகள் ₹ 65.10 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டு அவை 1,070 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளன.

**52.** புதிய தொழிற்கொள்கையானது, எளிதாக தொழில் செய்வதை மேம்படுத்தும். மேலும், அது, தொழிற்சாலைக்கான விரைவான தடையின்மைச் சான்றிதழ் பெறுதல், தொழிற்சாலைகளுக்கான நிலவங்கி, தொழிற்பேட்டைகள் மற்றும் தொழிற்பூங்காக்களில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய பிரச்சனைகளுக்கு திறன்மிக்க தீர்வுகளை அளிக்கும். எனது அரசு, அன்னிய நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதிலும், மென்பொருள் பூங்காக்கள், மருந்து பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், ஆடை அணிகலன் பூங்காக்கள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள், தானியங்கி உபகரணத் தொழிற்சாலைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்தும். இந்த தொழிற்கொள்கையானது, இவ்வாட்சிப்பரப்பு மக்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு உதவிபுரியும் மற்றும் பல தொழிற்சாலைகளைத் திரும்பக்

கொண்டுவரும் என நான் நம்புகிறேன். மாசு ஏற்படுத்தாத பசுமை தொழிற்சாலைகளைச் சிவப்புக் கம்பளம் கொண்டு எனது அரசு வரவேற்கும். புதிய தொழிற்சாலைகளை தொடங்குபவர்களுக்கு எனது அரசு இந்தியாவின் மற்ற மாநிலங்களை ஒப்பிடும்பொழுது குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்க முடிவு செய்துள்ளது.

**53.** எனது அரசு, பன்முக உற்பத்தித் தொழிற்சாலைகளின் மேம்பாட்டுக்காக புதுச்சேரியின் சேதராப்பட்டு மற்றும் கரசூர் கிராமங்களில் 800 ஏக்கர் நிலவங்கி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா (IT) / தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்காக மேட்டுப்பாளையத்தில் 25 ஏக்கர் நிலத்தை நிலவங்கிக்காக ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிலமானது, தொழில் துறையில் புதிய முதலீடுகளைக் கவர்ந்திழுப்பதற்காக, வெளிப்படைத்தன்மை கொண்ட கட்டமைப்புக்குள் நிருவகிக்கப்படும். காரைக்காலில் புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கான ஏராளமான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. மேலும், காரைக்கால், போலகத்தில் புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கான நிலத்தை பிப்டிக் நிறுவனம் (PIPDIC) அளிக்கத் தொடங்கியுள்ளது.

**54.** புதுச்சேரி, காலாப்பட்டில் தொழில்நுட்பக் கருவி அறை – உடன் – தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் 2018ஆம் ஆண்டிலிருந்து செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்நுட்ப மேம்பாட்டு மையமானது, தொழிற்சாலை மின்னணுவியல், தகவல் தொழில்நுட்ப அமைப்பு முறை மற்றும் வன்பொருள், வாகன மின்னணுவியல் முதலிய அத்தகைய தனித்தனிப் பிரிவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிற மின்னணு அமைப்பு முறையிலான வடிவமைப்பு மற்றும் உற்பத்தி தொடர்புடையதாக இருக்கும். கருவிஅறை மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு மையமானது MSMEக்களுக்குச் சேவைகளை அளிக்கும். மேலும், அது, இளைஞர்களுக்கு தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையிலான பயிற்சிகளை அளித்து அவர்களைத் திறனுடையவர்களாக ஆக்கி அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கும் வழிவகுக்கும். தொழில்நுட்ப மேம்பாட்டு மையமானது, தொழில் முனைவோர்களை மேலும் போட்டியிடத்தக்கவர்களாகத் மாற்றுவதற்கான திறனை அளிக்கும். அது ஆண்டொன்றுக்கு 6,000 பேருக்குப் பயிற்சி அளிக்கும். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தேவைப்படின் வெளிநாடுகளிலும் முதலீட்டாளர்கள் சந்திப்புகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அரசால் எடுக்கப்பட்டுள்ள செயல்பாடு மற்றும் முன்னேற்பாடு நடவடிக்கைகளின் மூலம், புதிய சரக்கு மற்றும் சேவை வரி (GST) யுகத்தில் இவ்வாட்சிப்பரப்பானது முதலீடுகளைக் கவர்ந்திழுக்கும் முனையமாக இருக்கும் என நான் நம்புகிறேன். பிப்டிக் நிறுவனத்தின் மூலம் ஓட்டல் நிறுவனங்கள்

அமைக்க கடன் பெற்றவர்கள் அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதில் தாமதம் ஏற்படுதால், அவர்கள் ஒரே தவணையில் கடனை திருப்பிச் செலுத்தினால் அவர்கள் செலுத்தும் வட்டியில் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படும். இதன்மூலம் வாராக்கடனை வசூலிக்க ஏதுவாகும். ரோடியர் பஞ்சாலை, சுதேசி மற்றும் பாரதி பஞ்சாலைகளின் புனரமைப்புத்திட்டம் எங்களுடைய அரசின் முக்கியமான திட்டமாக இருக்கிறது. இந்த பஞ்சாலைகளை புனரமைத்து அவைகளை இலாபத்தில் இயக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுக்கும்.

**உள்ளாட்சி**

**55.** “தூய்மையான புதுச்சேரி” என்பதே எனது அரசின் குறிக்கோள் ஆகும். இது, நகரகப் பகுதிகளில் “தூய்மை இந்தியா” திட்டத்தின்கீழ் துப்புரவுச் சுகாதாரத்தின் மீது செம்மையான கவனம் செலுத்தியதன் காரணமாக, 38 வார்டுகள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத (ODF) பகுதியாக மாற்றப்பட்டுள்ளன. மேலும், 28 வார்டுகள் உலகச் சுற்றுச்சூழல் நாளான 5-6-2017 அன்று திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத பகுதியாக அறிவிக்கப்படும். மாகி வட்டாரப் பகுதி ஏற்கனவே திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. மற்ற மூன்று வட்டாரங்களும் இந்த ஆண்டுக்குள் திறந்தவெளி மலம் கழித்தல்

இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்படும். புதுச்சேரி நகராட்சியில் 2,400 தனி வீட்டுக் கழிப்பறைகள், உழவர்கரை நகராட்சியில் 2,560 கழிப்பறைகளும், காரைக்காலில் 3,500 கழிப்பறைகளும், ஏனாமில் 950 கழிப்பறைகளும் ₹ 15.75 கோடி செலவில் கட்டப்படும்.

**56.** இதைப்போலவே, சுகாதாரத்தைப் பேணவும், பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், ₹ 3.42 கோடி செலவில் புதுச்சேரி நகராட்சியில் 4 பொதுக் கழிப்பறைகள் மற்றும் 2 சமுதாயக் கழிப்பறைகள், உழவர்கரை நகராட்சியில் 4 பொதுக் கழிப்பறைகள் மற்றும் 3 சமுதாயக் கழிப்பறைகள், காரைக்கால் நகராட்சியில் 3 பொதுக்கழிப்பறைகள் மற்றும் 9 சமுதாயக் கழிப்பறைகள் மற்றும் ஏனாம் நகராட்சியில் 3 பொதுக் கழிப்பறைகள் கட்டப்பட்டு வருகிறது.

**57.** தேசிய நகர வாழ்வாதார திட்டத்தின்கீழ் (NULM) ₹ 26.70 இலட்சம் நிதியில் 225 சுயஉதவிக் குழுக்கள் (SHG) உருவாக்கப்பட்டு அவற்றிற்கு நிதி உதவி அளிக்கப்படும். சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், ₹ 31 இலட்சம் செலவில் 477 நபருக்கு அவர்களின் நீடித்த வாழ்வாதாரத்திற்கு தொழில் தொடங்கிட பயிற்சியளிக்கப்படும். ஏனாம் பகுதியில் நடைமுறையில் இருக்கும் வட்டி மானியத் திட்டத்தின் (பவல வட்டி) கீழ் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும்

₹ 2 இலட்சத்தை உயர்த்தி ₹ 5 இலட்சம் வரை வங்கிகள் மூலம் கடன் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான வட்டி முழுமையையும் அரசு ஏற்கும். எனது அரசு, நமது மாநிலம் குப்பை இல்லாத நிலையை எட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. நகரத்தையும், நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளையும் துப்புரவாகவும், தூய்மையாகவும் வைத்துக்கொள்ளும் பொருட்டு நகராட்சியால் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குப்பைகளைத் தீர்வு செய்யும் பிரச்சனையை ஒட்டுமொத்தமாக ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க எனது அரசு நடவடிக்கை எடுக்கும். பொலிவுறு நகரத்திட்டத்தின்கீழ் (Smart City) புதுச்சேரி நகரப்பகுதியை கொண்டுவருவதற்கு இம்மாநில அரசு திட்டவரைவு ஒன்றை தயார் செய்து குறித்த காலத்திற்குள் மத்திய அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளித்தவுடன் அந்தத்திட்டம் தொடங்கப்படும்.

**வருவாய்**

**58.** 2016-17ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி சமூகப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 1,097 பயனாளிகளுக்கு ₹ 3.72 கோடி தொகை அளிக்கப்பட்டுள்ளது. எனது அரசுப் பேரிடர் மேலாண்மைக்காக 14 செயற்கைகோள் தொலைபேசிகளையும் (Satellite Phones) அதன் துணைக்கருவிகளையும் இயற்கை பேரிடர் காலத்தில் அளிக்க உத்தேசித்துள்ளது. மிகவும் பயனுடையதாக இருக்கும்

என்பதால் அனைத்து மாநிலங்கள் ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட பின்தங்கிய நிலையில் உள்ள மாவட்டங்களையும் (120 இடங்கள்) இணைக்கிற VSAT அடிப்படையிலான தகவல் பரிமாற்ற சேவைக்கான ஒரு முன்னோடித் திட்டத்திற்கு தேசிய பேரிடர் மேலாண்மை முகமை திட்டத்தின்கீழ் (NDMA) மற்றும் இவ்வாட்சிப்பரப்புகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது. தற்போது புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் மட்டுமே இருந்துவரும் வெள்ளம், சுனாமி, புயல் முதலியவற்றை முன்கூட்டியே அறிவிக்கும் எச்சரிக்கை அமைப்பு முறையை மாகி மற்றும் ஏனாம் வட்டாரப் பகுதிகளை உள்ளடக்கிய பிற பகுதிகளிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனது அரசு, வருவாய்த்துறையின் களப் பணியாளர்களுக்கு தகவல் பரிமாற்றக் கருவிகளை அளித்து CDRRP திட்டத்தின்கீழ் EWS மற்றும் அவசரகால செயல்பாட்டு மையத்தைப் பலப்படுத்த உத்தேசித்துள்ளது.

**59.** பொதுமக்களுக்குச் சேவை அளிப்பதற்கும் அலுவலக நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும் ஒற்றைச் சாளர அமைப்பு முறையிலான உரிமங்கள் (SWLS), ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான தேதி மற்றும் நேரம் கோரி இணையம் வாயிலாக மின்-விண்ணப்பம் தாக்கல் செய்தல், ஆதார் எண் அடிப்படையிலான பயோமெட்ரிக் வருகைப்பதிவேடு, ஆட்சியர்

அலுவலகத்துக்கான கோப்பு கண்டறியும் அமைப்புமுறை மற்றும் சூரிய ஒளி தகடுகள் ஆகிய இணையதள அடிப்படையிலான பயன்பாட்டுத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு அவை விரைவில் செயல்முறைப்படுத்தப்படும். தற்போதுள்ள பொதுச்சேவை மையங்களுக்கும் கூடுதலாக CSC 2.0 திட்டத்தின்கீழ் G2C சேவைகளை வழங்குவதற்காக, புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சி வரம்பு எல்லைகளில் பொதுச் சேவை மையங்களைத் தொடங்குவதற்காக 61 VLEகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. காரைக்கால் வட்டாரப் பகுதியில் பொதுச்சேவை மையங்கள் மூலம் FMB நகல்கள் அளிப்பதற்கான வசதிகளை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு ஆவணங்களின் நகல்களைக் கொடுக்கும் பிரச்சனையைத் தீர்வு செய்யும் பொருட்டு, 1969 ஆண்டு முதல் 2005 வரை பதிவேடுகளில் கிடைக்கும் DILRMP கீழான அனைத்து ஆவணங்களையும் மின்பதிவெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**60.** கடந்த 1973ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட குடியிருப்பு பட்டாவில் தற்போது பட்டா அளிக்கப்பட்ட நபர்களின் வாரிசு அல்லாத பிற தகுதி வாய்ந்தவர்கள் குடியிருப்பின், அவர்களின் பெயரில் அப்பட்டாவினை மாற்றம் செய்ய ஏதுவாக குடியிருப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும். ஆண்டு வருமானம் ₹ 75,000க்கு மிகாமலும், குடியிருக்க வேறெந்த வீடோ அல்லது

நிலமோ இல்லாத ஏழை மக்கள், ஆட்சேபணை இல்லாத அரசு நிலத்தினை அல்லது அரசு மனையில் தளம் போட்ட வீடு கட்டி குடியிருந்து வந்தால், அவர்களிடமிருந்து சந்தை மதிப்பு பெறாமல் இலவசமனை பட்டா வழங்கும் முறையினை நடைமுறைப்படுத்த நிலமானிய சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும். கிராம நத்தம் புறம்போக்குகளில் தற்போது வீடு கட்டி வசித்து வரும் மக்களுக்கு நத்தம் சர்வே செய்யப்படும். பரிச்சார்த்த முறையில் ஒதியம்பட்டு வருவாய் கிராமத்தில் உள்ள உத்திரவாகினிபேட் பகுதியில் நத்தம் புறம்போக்கினை நெறிமுறைப்படுத்தி நவீன சர்வே முறையில் சர்வே செய்து பட்டா அளித்திட நடவடிக்கை எடுக்கப்படும். நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் உபரி நிலங்களைக் கையகப்படுத்தி, அதனை தகுதி வாய்ந்த நபர்களுக்கு இலவச மனைப்பட்டா அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்**

**61.** எனது அரசு பருவகால மாற்றம் மீதான புதுச்சேரி மாநில செயல்திட்டத்தை செயல்படுத்துவதற்காக பருவகால மாற்ற பிரிவு ஒன்றை ₹ 1.56 கோடி செலவில் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளது. எனது அரசு முன்பு அமைக்க உத்தேசித்த கோளரங்கத்துடன் ஒருங்கிணைத்து ₹ 3.75 கோடி செலவில் காரைக்கால் திருநள்ளாற்றில் விண்வெளி வெளிப்பாட்டு மையம் மற்றும் புதுமை மையம் ஒன்றை உருவாக்கும்.

**சுற்றுலா**

62. புதுச்சேரியானது, தமிழ் மற்றும் பிரெஞ்சு கலாச்சாரம் கலந்திருக்கும் தலமாகும். இயற்கை அழகும், ஆன்மீக வளமும், உயர்ந்த பாரம்பரியம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களில், தென்னிந்தியாவின் புகழ் வாய்ந்த, மிகவும் விரும்பத்தக்க வார இறுதி நாளன்று சுற்றுலாத்தலமாக மேலோங்கி நிற்கிறது. அதுபோன்றே, புதுச்சேரியின் பிற மண்டலங்களான காரைக்கால், மாகி, ஏனாம் பகுதிகள் அதன் தனித்த சுற்றுலா வளங்களை கொண்டுள்ளன. கடந்த நிதிநிலை உரையில் அறிவித்ததுபோல், சுற்றுலாத்துறை ஆன்மீக சுற்றுலா, பாரம்பரிய மற்றும் யாட்ச மரினா பொழுதுபோக்கு மையம் அமைத்தல் போன்ற திட்ட கருத்துருவுக்களை மத்திய சுற்றுலா அமைச்சகத்திடம் நிதிக்கொடை வேண்டி சமர்ப்பித்துள்ளது. ஆனால், கடந்த 2015ஆம் ஆண்டு அமைச்சகத்தின் மூலம் பெறப்பட்ட நிதிக்கொடையில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் நிலுவையில் உள்ளதால், அமைச்சகம் மேற்சொன்ன திட்ட கருத்துருவில் ஆன்மீக சுற்றுலாவிற்கு மட்டும் நிதிக்கொடை அளிக்க முன்னுரிமைப்படுத்தி உள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டில் அளித்த நிதிக்கொடையில் பணிகள் துவங்கப்பட்டு 60 விழுக்காடு நிதி செலவிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டு கூடுதலாக

15 விழுக்காடு நிதி செலவிடப்பட்டு அமைச்சகத்திடமிருந்து ஆன்மீக சுற்றுலா என்ற தொகுப்பில் நிதிக்கொடை வாங்கப்பட்டு பணிகள் இவ்வாண்டே தொடங்கப்படும்.

**63.** சுற்றுலாச் செயல்பாடுகளை வலுவூட்டி, நெறிப்படுத்துவதன் மூலம் வருவாய் ஈட்டிட ஏதுவாக “சுற்றுலாக் கொள்கை” வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கடந்த ஆண்டில் சுற்றுலாப் பயணிகள் வருகை, முந்தைய ஆண்டைவிட 8 விழுக்காடு கூடுதலாகும். இந்த ஆண்டில் 10 விழுக்காடு சுற்றுலாப் பயணிகளின் வருகையை உறுதி செய்வதற்குத் தேவையான உரிய முயற்சிகளை எனது அரசு மேற்கொள்ளும். மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் “சுதேசி தர்ஷன்” என்ற திட்டத்தின்கீழ் ₹ 27 கோடி மதிப்பீட்டில் காலாப்பட்டு, நரம்பை, நல்லவாடு மற்றும் மணப்பட்டு கடற்கரைகளை அழகுபடுத்தும் மேம்பாட்டுப் பணிகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**64.** பாரம்பரிய கட்டிடங்கள் மற்றும் நினைவிடங்கள் ₹ 92 இலட்சத்தில் ஒளிர்வூட்டப்படும். ஊசுட்டேரி ₹ 3,37 கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும். மேலும், ஏனாம் கோபுரத்தினை சுற்றியுள்ள பகுதியில் பொழுதுபோக்கு பூங்கா ஒன்று ₹ 4.98 கோடி செலவில் அமைக்கும் பணி இவ்வாண்டில்

மேற்கொள்ளப்படும். திருநள்ளாறு கோயில் நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஸ்ரீதர்பாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்திற்கு அருகாமையில் உள்ள எமதீர்த்தம், பொய்யாக்குளம், அகத்தீஸ்வரர் தீர்த்தங்கள், திருக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்கு அர்பணிக்கப்படும். மக்களின் நல்வாழ்வுச் செயல்பாடுகளான யோகா, ஆயுர்வேதா மற்றும் பிற சிகிச்சை முறைகளை வலுப்படுத்துவதன் மூலம் புதுச்சேரியை “மக்கள் நல்வாழ்விற்கான மையமாக” உருவாக்கம் செய்வதற்கான ஒரு “சுற்றுலாத் திட்டம்” தயாரிக்கப்பட உள்ளது.

**65.** பிரெஞ்சு தூதரகத்தின் ஒத்துழைப்புடன் “போன்சூர் இந்தியா” என்ற மிக பெரும் திருவிழாவும் அதன் ஒரு அங்கமாக “உலகளாவிய பாய்மர படகு” போட்டியும் புதுச்சேரியில் நடத்தப்படும். மேலும், கூடுதலான சுற்றுலா பயணியர்களை கவர உணவு திருவிழா, கடற்கரை திருவிழா, புத்தாண்டு கொண்டாட்டங்கள், பாரம்பரிய நடன மற்றும் இசை திருவிழாக்கள் போன்றவை நடத்தப்படும். வார இறுதி நாட்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கலாச்சார நிகழ்ச்சிகள் கடற்கரை சாலையில் சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்படும். வரும் ஜூலை மாதத்திலிருந்து புதுச்சேரி விமான தளத்திலிருந்து விமான போக்குவரத்து தொடங்கப்படும்.

**நகர மற்றும் கிராமத் திட்டமிடல்**

**66.** இவ்வாட்சிப்பரப்பில் நில வணிகத்துறையை மேம்படுத்தும் பொருட்டும் இடைநிகழ்வாக தற்போதுள்ள பிரச்சனைகளை தீர்க்கவும் எனது அரசு நிலவணிக ஒழுங்குமுறை ஆணைக்குழு ஒன்றையும், நிலவணிக மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஒன்றையும் உருவாக்க உத்தேசித்துள்ளது. மேலும், நிலவணிகத்துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் அதன் செயல்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை கொண்டுவரவும் நிலவணிக திட்டங்கள் மற்றும் நிலவணிக முகமைகள் ஆகியவற்றின் பதிவு கணினி மயமாக்கப்படும். திட்டமிடும் அதிகாரக்குழுவின் ஒப்புதலளிப்பு நான்கு வட்டாரப் பகுதிகளிலும் கணினிமயமாக்கப்படும். மேலும், புதுச்சேரி வட்டாரப் பகுதியின் மாஸ்டர் பிளான் (Master Plan) இந்த ஆண்டுக்குள் அறிவிக்கை செய்யப்படும்.

**67.** நகர மற்றும் கிராம திட்டமிடல் சட்டமானது நிலப்பயன்பாட்டு மாற்றல் நடைமுறைகள், பாரம்பரிய கட்டிடங்களைப் பாதுகாத்தல், மாற்றல் செய்யத்தக்க மேம்பாட்டு உரிமைகள் முதலியவற்றை எளிமையாக்கும் பொருட்டு திருத்தம் செய்யப்படும். இவ்வாட்சிப்பரப்பில் உள்கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்காக மாநில உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியம் என்றழைக்கப்படும் புதிய நிதியம் ஒன்று உருவாக்கப்படும். சாலைகள் மற்றும் கால்வாய்கள் தேவைப்படுகிற

பல்வேறு குடிசை பகுதிகளில் 6.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் மற்றும் கால்வாய் அமைப்பதற்கான செயற்குறிப்புக்கும் கூடுதலாக நகர்புறத்திலுள்ள குடிசைப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். அதன் மூலம் 6,250 குடியிருப்பாளர்கள் பயன்பெறுவர்.

**68.** 2022ஆம் ஆண்டின் இறுதிக்குள் குறிக்கோளை அடையும் பொருட்டு, அனைவருக்கும் வீட்டு வசதி அளிப்பதற்கான "PMAY" என்னும் மைய ஊக்காதரவுத் திட்டத்தின்கீழ் அனைத்து நான்கு வட்டாரப் பகுதிகளிலும் உள்ள பொருளாதாரத்தின் நலிந்த பிரிவினருக்கான வீட்டு வசதித் தேவைகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பயனாளிகள் தாங்களாகவே வீடு கட்டிக்கொள்ளும் திட்டத்தின்கீழ் 2016-17ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த 3,848 வீடுகளுக்கு மத்திய அரசின் பங்கில் இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைகளை இந்திய அரசிடம் பெறப்பட்ட பிறகு விடுவிக்கப்படும். கூடுதலாக, மேற்சொன்ன திட்டத்தின்கீழ் 5,000 புதிய வீடுகளை கட்டுவதற்கான விவரமான திட்ட அறிக்கைகளை வீட்டு வசதி மற்றும் நகரக வறுமை ஒழிப்பு அமைச்சகத்துக்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம் மூலம் 1,362 நபர்கள் சுமார் ₹ 3 கோடி அளவுக்கு காமராஜர் வீடுகட்டும் திட்டத்தின்கீழ் மானியம் / கொடையை பல தவணைகளில் பெற்று

வீடு கட்டாமல் இருப்பதனால் அவர்கள் செலுத்தவேண்டிய வட்டித்தொகை ₹ 3 கோடி ஆகும். அவர்கள் அசல் தொகையை ஒரே தவணையாக திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் எனது அரசு, பயனாளிகள் செலுத்த வேண்டிய வட்டி தொகையை முழுவதும் தள்ளுபடி செய்ய முடிவு செய்துள்ளது. மேலும், அங்கீகரிக்கப்படாத மனைகள் சம்பந்தமான பிரச்சனைகளை தீர்க்க அனைத்து தரப்பினருக்கும் ஏற்றவாறு உரிய நடவடிக்கையை எனது அரசு எடுக்கும்.

**போக்குவரத்து**

**69.** 2016-17ஆம் ஆண்டின்போது, வருவாய் இலக்கு ₹ 83 கோடி தொகைக்கு எதிராக ₹ 86.94 கோடி தொகையை எட்டியது. 2030ஆம் ஆண்டு வாக்கில் அனைத்து துறைகளின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற "நவீன திறனுடைய மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தைக் கட்டமைக்கிற" தொலைநோக்குடன், இவ்வாட்சிப்பரப்புக்கான போக்குவரத்துக் கொள்கையை வகுப்பதற்கு எனது அரசு உத்தேசித்துள்ளது. பொதுமக்கள் போக்குவரத்து வசதியை அதிகரிக்கும் முயற்சியாக, நமது தேவையைக் கணிப்பீடு செய்த பின்பு புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது இருந்துவரும் நுழைவுத் தணிக்கைச் சாவடிகளை (Entry

check-posts) தற்காலிகத் கட்டடத்திலிருந்து நிரந்தரக் கட்டடத்திற்கு மாற்றும் பொருட்டு, இதுவரையில் ஐந்து தணிக்கைச் சாவடிகளுக்குத் தேவைப்படுகிற நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானமும், விரைவில் தொடங்கவிருக்கிறது.

**70.** எனது அரசு, ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (IDTR) ஒன்றை நிறுவுவதற்கு உத்தேசித்துள்ளது; இதற்கென தேங்காய்த்திட்டில் 10 ஏக்கர் பரப்புடைய நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், காரைக்கால் பகுதியில் ஏற்கனவே உள்ள இடத்தில் வட்டார ஓட்டுநர் பயிற்சி மையம் ஒன்று அமைக்க எனது அரசு உத்தேசித்துள்ளது. மையச் சாலைப் போக்குவரத்து நிலையத்தால் DPR தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உரிமம் வழங்குவதற்கான மேம்பட்ட மென்பொருள் சாதனம், புதுச்சேரியிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் அனைத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன; இது, இதர வட்டாரங்களிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

**71.** சாலையில் செல்லும் வாகனங்கள் தகுதியுடையனவாக இருப்பதை உறுதிசெய்யும் பொருட்டு, சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் நிதி உதவியுடன், ஆய்வு மற்றும் சான்றளிப்பு மையம் ஒன்று அமைக்கப்படும்.

மத்திய நிதி உதவி ₹ 14.40 கோடி தொகை, மற்றும் மாநில நிதி உதவி ₹ 1.35 கோடி தொகையுடன் ₹ 15.75 கோடி செலவில், புதுச்சேரியில் அத்தகைய ஆய்வு மற்றும் சான்றளிப்பு மையம் நிறுவும் திட்டத்திற்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டமானது, புனேயில் உள்ள இந்தியத் தானியங்கி ஆராய்ச்சி சங்கத்தினால் (ARAI) மேற்கொள்ளப்படவிருக்கிறது.

**புதுப்பிக்கவல்ல மின்சக்தி**

**72.** எனது அரசு, மின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, மாடியில் சூரியஒளி தகடுகள் மூலம் மின்சக்தி உற்பத்தியை மேம்படுத்தி வருகிறது. மத்திய அரசு, ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய சக்தி இயக்கத்தின்கீழ், வீடுகளுக்கு, நிறுவனங்களுக்கு, கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் உள்ளிட்ட சமுதாய அமைப்புகளுக்கான 30 விழுக்காடு மானியம் வழங்கி வருகிறது. இந்தத் திட்டத்தின் நோக்கத்திற்கு இணையாக, மாநில நிதியத்திலிருந்து மேற்சொன்ன திட்டத்திற்காக 20 விழுக்காடு பங்களிக்க எமது அரசு உத்தேசித்துள்ளது. அரசுக்கான வள ஆதாரங்களைத் தொடர்ச்சியாக அளிக்கும் நோக்குடன், சூழகமான சுற்றுச் சூழலையும் நிலைக்கத்தக்க-புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, இவ்வாட்சிப்பரப்பிலுள்ள மின் பயனீட்டுக்

கட்டணத்தின் மீது மேல்வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கப்பெறும் நிதியானது, மேற்சொன்ன வகையினை நுகர்வோர்களுக்கும் கூடுதலாக, அரசு கட்டடங்களை பசுமைக் கட்டடங்களாக மாற்றுவதற்கும் பயன்படுத்தப்படும். கிடைக்கப்பெறும் நிதியானது, புதுச்சேரி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமைக்கும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

**ஊரக வளர்ச்சி**

**73.** எனது அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தின் (MGNREGA) வழிகாட்டுதல்களுக்கேற்ப, வெவ்வேறு வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தின் (MGNREGA) நிதியத்தைப் பயன்படுத்தி, 20 பள்ளிகளில் உள்ள பள்ளி விளையாட்டு மைதானங்கள் மேம்படுத்தப்படும். 6 இலட்சம் மனித நாட்களைத் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டடக் கட்டுமானப் பணிகள் போன்ற பொருள்வளம் சார்ந்த பணிகளும், மேற்கொள்ளப்பட உள்ளன. தேசிய நகர வாழ்வாதாரத் திட்டத்தின் (NRLM)கீழ், 176 குடியிருப்பு நிலைக் கூட்டமைப்பு (HLF),

44 பஞ்சாயத்து நிலைக் கூட்டமைப்பு (PLF) மற்றும் 470 புதிய சுய-உதவிக்குழுக்கள் (SHG) அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கும் கூடுதலாக, சுழல் நிதி (Revolving Fund) மூலம் 180 சுய-உதவிக்குழுக்கள் பயனடையும்.

**74.** "தூய்மை இந்தியா இயக்கத்தின்" (Swachh Bharat Mission) முக்கியத்துவம் கருதியும், கிராமப் பகுதிகளில் அடிப்படைத் துப்புரவு வசதிகளை அளிக்க வேண்டிய தேவையைக் கருதி ₹ 6.40 கோடி மாநில பங்களிப்பாக ஒதுக்கி, தனிப்பட்ட வீடு ஒவ்வொன்றுக்கும் மத்திய அரசால் வழங்கப்பட்ட ₹ 12,000 தொகைக்கும் கூடுதலாக, மாநில பங்களிப்பாக ₹ 8,000 தொகை வழங்கப்பட்டது. "தூய்மை இந்தியா கிராம இயக்கத்தின்"கீழ் 35,830 கழிவறைகள் கட்டப்படும். அதன்படி 98 கிராம பஞ்சாயத்துக்கள் திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. RURBAN திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் நகர்புற வசதிகளை அளிக்கும் பணிகள் புதுச்சேரியில் பாகூர் பகுதி மற்றும் காரைக்காலில் திருநள்ளார் பகுதி என இரு தொகுதிகளில் (Clusters) மேற்கொள்ளப்படும்.

**ஆதிதிராவிடர் நலம்**

**75.** 2016-17ஆம் ஆண்டின்போது, ₹ 130.84 கோடி தொகை செலவிடப்பட்டுள்ளது. இத்தொகையானது, இதுவரை இல்லாத

அளவுக்கு 96.92 விழுக்காடு அளவிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின்போது, ஆதிதிராவிடர் நலத்துறைக்கு ₹ 156.89 கோடி தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையானது, அட்டவணை இனத்தவரின் (Scheduled Castes) நலத் திட்டங்களுக்காகவும், சமூகப்-பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும் செலவிடப்படும்.

**76.** எனது அரசு, அட்டவணை இன மக்களின் சமூகப்-பொருளாதார நிலையை ஒரு காலவரைக்குட்பட்ட முறையில் உயர்த்துவதற்காகவென்றே 23 நலத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. மேலும், அட்டவணை இன மக்களின் பல்வேறு சமூகப்-பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கிடையே, “இலவச வீட்டு மனைகள் / வீடுகள் வழங்குதல் திட்டத்தின்”கீழ் 91 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். வீட்டுவசதி மானியம் வழங்குவதற்கான “பாரத ரத்னா ராஜீவ் காந்தி வீடு கட்டுமானத் திட்டம்” என்னும் புதுமையான திட்டத்தின்கீழ், வீடு கட்டிக்கொள்வதற்காக நபர் ஒவ்வொருவருக்கும் ₹ 4 இலட்சம் தொகை என 2,017 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இந்த ஆண்டு, 2,200 பயனாளிகளுக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அட்டவணை இன மக்கள் வசிக்கும் இடங்களில் சுகாதாரச் சூழலைப் பேணிவரும் பொருட்டு, அவர்களாகவே தங்களுடைய

வீடுகளில் துப்புரவு கழிப்பிடங்கள் கட்டுவதற்காக, வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள 33 அட்டவணை இன குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் மானியமாக ₹ 20,000 தொகை வழங்கப்பட்டது.

**77.** கடந்த ஆண்டு, குடும்ப வருமானம் ₹ 2 இலட்சம் தொகைக்கும் குறைவாக பெற்றிருக்கிற 483 நபர்களுக்கு, அவர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திலுள்ள முதல் இரண்டு (மணமாகாத) பெண்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது திருமணத்தை நடத்துவதற்காக தலா ₹ 50,000 நிதி உதவி வழங்கப்பட்டது. தேசியத் திட்டநிரலில் வகை செய்யப்பட்டவாறு, எமது அரசானது, 841 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு, அவர்களது உடல்நல மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும் பொருட்டு, ₹ 12,000 நிதி உதவி அளித்துள்ளது. அட்டவணை இன கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அளிக்கப்பட்டு வருகிற ₹ 12,000 நிதி உதவியை உயர்த்தி பேறுகாலத்திற்கு முந்திய மற்றும் பேறு காலத்திற்கு பிந்தைய என இரு கட்டங்களாக ₹ 18,000 வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**78.** “இருளர்” இனத்தவரை இவ்வாட்சிப்பரப்பு பொறுத்தமட்டில் அட்டவணை பழங்குடியினர் பட்டியலில் இந்திய அரசு அறிவிக்கை

செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் அட்டவணை பழங்குடியினருக்கான அனுகூலங்களைப் பெறும் வகையில், மேற்சொன்ன அறிவிக்கை புதுச்சேரி அரசால் அதன் அதிகாரமுறை அரசிதழில் மறு பதிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. எமது அரசு, முதற்கட்டமாக, பட்டியல் பழங்குடியினர் குடியிருப்புகளில் அவர்களுடைய கட்டமைப்பு மேம்பாடு நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல் நெறிகளுக்கேற்ப அவர்களது குழந்தைகளுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குதல் பொறுத்தமட்டில் பட்டியல் பழங்குடியின மக்களை மேம்படுத்துவதற்காக ஆதிதிராவிடர் நலத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்குள்ளாகவே ஓர் அடையாள ஒதுக்கீடாக (Token provision), பட்டியல் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் (புதுச்சேரி ₹ 10 இலட்சம் மற்றும் காரைக்கால் ₹ 5 இலட்சம் தொகைகள்) என ₹ 15 இலட்சம் தொகையை 2017-18ஆம் ஆண்டுத் திட்டத்தின்போது ஒதுக்கீடு செய்திருக்கிறது.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்**

**79.** நலத் திட்டங்களைச் சிறந்த முறையில் செயற்படுத்துதலை உறுதிப்படுத்துகிற மற்றும் தனிச் சிறப்புக்

கவனம் செலுத்துகிற நோக்குடன், தனியொரு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறை அமைக்கப்பட்டது. வரவு-செலவுத் திட்டத்திலும் தனியே வகை செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் தேவைப்பட்ட பணியாளர்கள் சமூக நல இயக்ககத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு சிறுபான்மையினருக்கு தனியாக துறை அமைக்கப்பட உள்ளது. அதேபோல் பிற்படுத்தப்பட்டோர் துறையானது வலுப்படுத்தப்பட்டு இவர்களின் மேம்பாட்டுக்கு எனது அரசு தனிகவனம் செலுத்தும். ஆறு மாத காலத்திற்குள் புதுச்சேரி மாநிலத்தில் உள்ள மக்களின் சாதிவாரி கணக்கெடுப்புகள் எடுக்கப்பட்டு அதன் விகிதாச்சாரப்படி நலவாழ்வு திட்டங்கள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**சமூக நலம்**

**80.** எனது அரசு, சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு மாற்றுத் திறனாளிகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர், ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்கள், ஏழைக் கைவினைஞர்கள், இளங்குற்றவாளிகள் முதலானோர் நலனுக்காக வெவ்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தின் தீங்கிழைக்கப்படத்தக்க பிரிவுகள் அனைத்திற்கும் பாதுகாப்புச் சூழல்களை உறுதி செய்வதற்குத் தேவையான

நடவடிக்கைகளை எமது அரசு தொடர்ந்து மேற்கொண்டுவரும். இவ்வாட்சிப்பரப்பின் மொத்த மக்கள் தொகையில், 2016-17ஆம் ஆண்டின்போது 20,501 மாற்றுத் திறனாளிகள், செயற்கை உறுப்பு உபகரணங்கள் வழங்குதல், மூன்று சக்கர மோட்டார் சைக்கிள்கள் வழங்குதல், படிப்பு உதவித் தொகை வழங்குதல், போக்குவரத்துப்படி வழங்குதல் போன்ற வெவ்வேறு நலத்திட்டங்களின்கீழ் ₹ 52 கோடி தொகை அளவுக்கு பயனடைந்தனர்.

**81.** குழந்தைகளின் நலத்தில் அக்கறை கொண்டு குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, “ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்” இவ்வாட்சிப்பரப்பில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ₹ 7.82 கோடி தொகை வழங்கப்பட்டிருக்கிறது மற்றும் அத்தொகை முற்றிலுமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

**82.** எனது அரசு, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுக்கும் அதிகாரமளிப்புக்கும் முன்னுரிமை அளித்து வருகிறது. 18 வயதுவரை உள்ள குழந்தைகளின் பேராவலைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, இந்திய அரசமைப்பில்

அளிக்கப்பட்டுள்ள அவர்களது உரிமைகள் மறுக்கப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்காக, தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட "குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்புக்கான மாநில ஆணையம்" அமைக்கப்படும். முதியோர் ஓய்வூதியம், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுப் பணிகள், திட்டங்கள் மற்றும் மகளிர் பயனாளிகளுக்கு நிதி உதவி போன்ற செயல்பாட்டிலுள்ள திட்டங்கள் இடையீடு ஏதுமின்றி தொடர்ந்து மேற்கொள்ள எனது அரசு உறுதிபூண்டுள்ளது.

**83.** எனது அரசு பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் கல்வி கற்கும் (Beti Bachao Beti Padho) திட்டத்தைப் முன்னோடித் திட்ட முறையில் ஏனாம் வட்டாரத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் முக்கியத்துவத்தைப் போதிக்கும் பொருட்டு, இதில் அக்கறை கொண்டோர், அங்கன்வாடி பணியாளர்கள், சமயத் தலைவர்கள், சுயஉதவிக் குழுக்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், கிராம மட்டத்திலான துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வுத் திட்டம், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம் நடத்தப்பட்டன. புதிதாகப் பிறந்த பெண் குழந்தைகளுக்கு குழந்தைக் கைப்பைப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. மத்திய அரசால் வழங்கப்பட்ட ₹ 18.20 இலட்சம் தொகை

முற்றிலுமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டங்களின் விளைவாக, இலக்கு பகுதியான ஏனாம் பிராந்தியத்தில் குழந்தைகள் பாலின விகிதாச்சாரம் கணிசமாக அதிகரித்துள்ளது.

**குடிமைப்பொருள் வழங்கல்**

**84.** எனது அரசானது, ஸ்மார்ட் அட்டை அடிப்படையில் பொது விநியோகத் திட்டத்திலிருந்து, தற்போதிருந்துவரும் வள ஆதாரங்களைப் பயன்படுத்தி அண்மைத் தொழில்நுட்பத்தைக் கொண்டு ஆதார் அட்டை அடிப்படையிலான பொது விநியோகத் திட்டத்திற்கு மாறுவதென உத்தேசித்துள்ளது. எனது அரசு, கள ஆய்வு மற்றும் சமூகத் தணிக்கையின் ஒளிவுமறைவற்ற நடைமுறை வாயிலாக இரட்டிப்பு குடும்ப அட்டைகளைக் களைவதற்கு உத்தேசித்துள்ளது. புதுச்சேரி மாநிலத்தில் அதிக வருமானம் பெறுபவர்கள் தாங்களாகவே முன்வந்து அரசின் இலவச சலுகைகள் வேண்டாமென விருப்பம் தெரிவித்தால், அவர்களை கௌரவப்படுத்தி பாராட்டும் வகையில் அவர்களுக்கு பழைய குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைக்கு பதிலாக புதியதாக பச்சை நிற (Green Card) குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு நிதிச்செலவு குறையும். அந்த நிதியானது, ஏழை எளிய மக்களின் நலத்திட்டங்களுக்கு செலவு செய்யப்படும்.

**கலை மற்றும் பண்பாடு**

**85.** எனது அரசு, வளமான பண்பாட்டு மரபுகளை வளர்ப்பதற்கும், பாதுகாப்பதற்கும், பரவச் செய்வதற்கும், பாரதியார் பல்கலைக்கூட வளாகத்தில் ₹ 14.93 கோடி செலவில் பண்பாடு அமைச்சகத்தின் நிதி உதவியோடு தாகூர் பண்பாட்டு வளாகம் ஒன்றை கட்டுமானம் செய்வதற்கு உத்தேசித்துள்ளது. முதலியார்பேட்டையில், தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிற அரசு கிளை நூலகத்தை புதியதாகக் கட்டப்பட்ட அரசுக் கட்டடத்திற்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. அட்டவணை இன மக்களைக் கொண்ட பகுதிகளில் அமைந்துள்ள 13 நூலகங்களுக்கு கணினிகள், நகல் எடுப்புக் கருவிகள் மற்றும் R.O. குடிநீர் அமைப்பும் அளிக்கப்பட உள்ளது. இந்தியாவிலுள்ள வெவ்வேறு மாநிலங்களிலிருந்து கலைஞர்கள் பங்குபெறும் “யாத்ரா” விழா மற்றும் ஜம்மு-காஷ்மீர் கலைஞர்கள் பங்குபெறும் “ஜஸ்மே காஷ்மீர்” விழாவும், தஞ்சை தென்மண்டல பண்பாட்டு மையத்துடன் சேர்ந்து நடத்தப்பட உள்ளன. புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள நாடகக் கலைஞர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்காக தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் 150ஆம் ஆண்டு நாடக விழாவைச் சிறந்த முறையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நாடகக் கலையை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒரு கலைமன்றம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வருவோரைக் கவர்வதற்காக, வார இறுதியில்

நடத்தப்படுகிற நிகழ்ச்சி புதுச்சேரியில் தொடர்ந்து நடத்தப்படும். மற்றும் காரைக்காலுக்கும் அது நீட்டிக்கப்படும். உள்ளூர் மற்றும் பிற மாநிலக் கலைஞர்கள் ஈடுபடுகிற மாதாந்திர நிகழ்ச்சிகள் தென்மண்டல பண்பாட்டு மையத் துறையுடன் நடத்தப்படும். நாடக கலைஞர்களின் செயல்பாடுகளை உயர்த்துவதற்கு வேண்டிய ஆதரவுகளையும், நாடகம் நடத்த தேவையான இடத்தையும் அளிக்கும்.

**இந்து அறநிலையத் துறை**

**86.** எனது அரசு, பக்தர்களின் வசதிக்காக கோயில் வருவாயிலிருந்து அன்னதான திட்டம் ஆரம்ப கட்டமாக புதுச்சேரியில் ஸ்ரீ மணக்குள விநாயகர் திருக்கோயில், ஸ்ரீ வேதபுரீஸ்வரர் வரதராஜப்பெருமாள் கோயில், வில்லியனூர் கோகிலாம்பிகை சமேத திருக்காமேஸ்வரர் திருக்கோயில், கருவடிக்குப்பம் சித்தானந்த சுவாமி திருக்கோயில் மற்றும் காரைக்கால் புனிதவதி அம்மையார் திருக்கோயில், திருநள்ளார் ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் திருக்கோயில், அம்பகரத்தூர் அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் திருக்கோயில் ஆகிய கோயில்களில் அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளது. எனது அரசு, மகளிருக்கு அதிகாரமளிக்கும் வகையில் இந்து அறநிலைய கோயில் நிர்வாகத்தில் பெண் உறுப்பினர் ஒருவரை சேர்க்க உத்தேசித்துள்ளது. உலேமாக்களுக்கு (Ulemas) தற்பொழுது

வழங்கப்பட்டுவரும் கௌரவ ஊதியம் ₹ 1,000லிருந்து ₹ 4,000ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும், நலிவடைந்த வருவாய் குறைவாக உள்ள இந்து கோயில்களில் பணிபுரியும் பூசாரிகள் / குருக்களுக்கு மாதம் ₹ 3,000 கௌரவ ஊதியம் வழங்கப்படும்.

**பொது**

**87.** புதுச்சேரி அரசு “கருவூல பணி வகைமுறை திட்டத்தின்” (Treasury Mission Mode Project)கீழ் அரசு வரவு கணக்கிடும் முறையை [Government Receipts Accounting System (GRAS)] நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்துள்ளது. இது பொதுமக்கள், அரசுத்துறை அலுவலகங்கள் அரசின் வரவினங்களை இணைய வசதி மூலம் வங்கியில் செலுத்த வழிவகுக்கும். முதற்கட்டமாக குறைவான பண பரிமாற்றம் புதுச்சேரியில் உள்ள துறை அலுவலகங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும். பின்னர் அனைத்து அலுவலகங்களுக்கும் விரிவுப்படுத்தப்படும். தற்போது இணைய வசதி மூலம் வரவினத்தை பெறும் துறைகள் தகவல்களை கருவூலத்துக்கு பரிமாற்றம் செய்து கொள்ளும். இதனால் கருவூலம் அரசு வரவினத்தை சுலபமாகவும், விரைவாகவும் கணக்கீடு செய்து கொள்ள ஏதுவாகும். எனது அரசு அலுவலக நடவடிக்கைகளை ஒளிவுமறைவற்ற மற்றும் திறம்பட்ட முறையில் மேற்கொள்ளும் நோக்கத்துடன், 2017-18ஆம் ஆண்டின்போது தலைமைச் செயலகம், வேளாண் துறை, உள்ளாட்சித் துறை,

தகவல் தொழில்நுட்ப துறை, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் துறைமுகத்தில் 250 பயனீட்டாளர்களுடன் மின்னணு அலுவலகம் (e-Office) செயற்படுத்தப்படும். மத்திய அரசின் சில அமைச்சகங்கள் மத்திய ஊக்குவிப்புத்திட்டங்களுக்கு இவ்வரசு தன் பங்களிப்பை தரவேண்டும் என வற்புறுத்துவதால், எனது அரசு மத்திய நிதி அமைச்சகம் ஏற்கனவே ஒப்புக்கொண்டவாறு அத்திட்டங்களுக்கு 100 விழுக்காடு நிதி அளிக்கவேண்டும் என இந்திய அரசை / நிட்டி ஆயோக்-ஐ வற்புறுத்தி வருகிறது.

**88.** காலியாக உள்ள அரசுப்பதவிகளை நிரப்புவதில் எனது அரசு முனைப்பாக செயல்பட்டு வருகிறது. அதேபோல், பதவி உயர்வு வழங்குவதிலும் முன்னுரிமை அளித்து உரிய காலத்தில் பதவிகள் நிரப்பப்படும்.

**89.** மேற்சொன்ன இலக்குகளை எய்துவதற்காக, எனது அரசு இவ்வாட்சிப்பரப்பினை “வளமான புதுச்சேரி”யாக மாற்றுவதற்காக இடையறாமலும், ஓய்வின்றியும் பணியாற்ற உறுதி கொண்டிருக்கிறது. அதற்கு என்னோடு இணைந்து மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒத்துழைப்பு தருகிறார்கள். அதனால்தான் புதுச்சேரி மாநிலம் முன்னேற்றப்பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. அகில இந்திய அளவில் 7 விழுக்காடு உள்ள வளர்ச்சியை ஒப்பிடும்போது

கடுமையான சோதனைகளை கடந்த ஆண்டு சந்தித்தபோதிலும் எனது அரசு 11.4 விழுக்காடு வளர்ச்சியை எட்டியுள்ளது என்பது திறமையான நிர்வாகத்தின் விளைவே ஆகும்.

**90.** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, 2017-18ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நான் இந்த அவையின் முன் சமர்ப்பிக்கின்றேன். இது குறித்து மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஆதரவை நாடுகிறேன்.

***நன்றி !***

***வணக்கம் !!***

தூய்மை-இந்தியா

பசுமை-புதுச்சேரி

*அச்சிட்டோர் :* **அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 9**